# செயலாற்றுகை அறிக்கை - 2015

## அபிவிருத்தி நிதித் திணைக்களம்

# உள்ளடக்கம்


| | | பக்கஇலக்கம் |
|---|---|---|
| 1. | நிறுவனஅமைப்பு | |
| 1.1 | தொலைநோக்கு | 2 |
| 1.2 | செயற்பணிக்கூற்று | 2 |
| 1.3 | அறிமுகம் | 3 - 4 |
| 1.4.1 | நிதிச்சந்தையும்ஆரம்பப்பிரிவும் | 3 |
| 1.4.2 | நுந்நிதிப்பிரிவு | 3 |
| 1.4.3 | சிறியமற்றும்நடுத்தரக்கைத்தொழில்முயற்சிகள்பிரிவு | 3 |
| 1.4.4 | அபிவிருத்திநிதி,பெறுமதியாக்கம்,பற்றியவியூகத்திட்டமிடல்பிரிவு | 4 |
| 1.4 | பணிகள் | 4 - 5 |
| 2. | 2015ம்ஆண்டின்செயலாற்றுகை | |
| 2.1 | மேன்நோக்கு | 7 - 8 |
| 2.2 | சிறியமற்றும்நடுத்தரக்கைத்தொழில்முயற்சிஅபிவிருத்தி | 8 - 11 |
| 2.3 | நுந்நிதியீட்டம் | 11 -13 |
| 2.4 | விவசாயத்துறைஊக்குவிப்புக்கள் | 13 - 25 |
| 2.5 | உணவுப்பாதுகாப்பு | 25 - 30 |
| 2.6 | குறிப்பிட்டகுழுவினருக்கானவிஷேடஊக்குவிப்புக்கொடுப்பனவுகள் | 31 - 35 |
| 3 | நிருவாக,நிதிச்செயலாற்றுகை | |
| 3.1 | நிருவாகப்பிரிவு | 36 - 41 |
| 3.2 | நிதிப்பிரிவு. | 42 – 43 |
| 3.3 | கணக்காய்வுஜயவினாக்கள்பிரிவு | 44 |

**தூரநோக்கு**

"அபிவிருத்திநிதிக்குத்தேவையானவசதிகள்வழங்கும்அரசின்பிரதானமுகவர்நிறுவனமாகமாறுவது"

**பணிக்கூற்று**

"உரியதரப்பினரின்ஒத்துழைப்புடன்சிறியமற்றும்நடுத்தரமுயற்சியாண்மைஅபிவிருத்திக்குத்தேவையானநிதிவழங்களைஏற்படுத்துதல்,ஆரம்பமுயற்சியாண்மைப்பிரிவுக்கானமூலதனஈட்டம்மற்றும்அதற்குரியகொள்கைவியூகங்கள்வகுத்தல்மறும்அவற்றுக்கானவசதியளித்தல்"

## அறிமுகம்

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் நுந்நிதித்துறையை முன்னேற்றுவதை நோக்காகக்கொண்டு 2005ம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ம் திகதி இத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது .அலுவலர்கள் எண்மரும் உதவியாளர்கள் மூவருமாக பதினொரு பேரைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திணைக்களம் இப்போது மொத்த ஆளணியினர் 31 பேரைக்கொண்டு மிகவும்வெற்றிகரமாகச் செயற்பட்டுவருகிறது.
திணைக்களத்தின் பிரதான கடமைகளை நான்கு பிரிவுகளாக வகுக்கலாம்.

### 1. ஆரம்பபிரிவு அபிவிருத்தி மற்றும் நிருவாகப்பிரிவு.;

அரசின் அபிவிருத்தி மானியத்திட்டங்களுக்கான நடைமுறைப்படுத்தல் கொள்கைவகுப்பு,மற்றும் அபிவிருத்திக்கொள்கை முன்னெடுப்பு,கட்டுப்பாடு,ஒருங்கிணைப்பு,உணவுப்பாதுகாப்பு,குறைவருமானம்பெரு வோர் பொருளாதார அபிவிருத்தி ஊடாக கிராமிய குடும்பவருமானம் அதிகரிப்பு பற்றிய கொள்கை,முன்னெடுப்பு போன்றவற்றிற்கான வசதியளிப்பும் ஏனைய திணைக்களத்தின் அன்றாட நிருவாக நடவடிக்கைகளும்

### 2. நுந்நிதிப்பிரிவு அபிவிருத்தி ;

கடந்த பல தசாப்தங்களாக வறுமையொழிப்புக்காக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறையான நுந்நிதியீட்டம் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடலாவியரீதியில்இத்திட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும் கிராமிய மட்டத்தில் வணிக வங்கிகளினதும்,அரசசார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகள் குறைந்தமட்டத்தில் காணப்பட்டது.நுந்நிதியானது நடுத்தரவருமானம் பெறும்குடும்பத்தினரது வருவாயை உயர்த்தவும் குறைவருமானம் பெறும்குடும்பத்தினரது நுகர்வுச்செலவுக்குதவவும் அவர்களது சேமிப்புப்பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும் அனைத்து பிரசைகளினதும் நுகர்வை அதிகரிப்பதற்கும் பெண்களின் சமூக,பொருளாதாரமட்டங்களைஅதிகரிப்பதற்கும் பேருதவிபுரிகிறது.

### 3.சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்திப்பிரிவு ;

இலங்கை அரசின் ஒட்டு மொத்தகொள்கைச்சட்டகத்தினுள் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைப்பிரிவு,பிரதான வியுகப்பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏனெனில்அதனூடாகபொருளாதார அபிவிருத்தி,பிரதேசஅபிவிருத்தி, வேலைவாய்ப்பு, மற்றும்வறுமையொழிப்பு ,என்பன ஏற்படுவதனாலாகும்.அவைதெளிவாக இலங்கைப்பொருளாதாரத்தில்செல்வாக்குச்செலுத்துவதனூடாக சிறிய மற்றும் நடுத்தரக்கைத் தொழில் பிரிவின் ஊடாக இலங்கையின் மொத்த முயற்சியாண்மைகளில்75% மும் , வேலைவாய்ப்பில் 45%மும், மொத்தத்தேசிய உற்பத்தியில்52%மும்பங்களிப்புச் செய்வதனாலாகும்.

## 4. அபிவிருத்தி நிதி பற்றிய வியூகத்திட்டமிடல் பிரிவு-;


மேலதிக அறுவடை முகாமைத்துவம்செய்யப்பட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவு விவசாயிகள் ஏனைய சந்தைக்காரணிகளின்பால் கவனத்தைச் செலுத்திகேள்வி நிரம்பல் காரணிகளில் சமநிலை ஏற்படுத்துதல்.தேசிய பொருளாதார அபிவிருத்திச்செயன்முறைக்கு பெறுமதியானபங்களிப்பைச் செலுத்திசிறியமற்றும் நடுத்தரமுயற்சியாண்மையினரை ஊக்குவித்து புதிய முயற்சியாளர்களை அடையாளங்காண்பதை நோக்காகக் கொண்டு திணைக்களத்தின் பங்களிப்புடன் சலுகைக்கடன்கள், திறைசேரிப்பிணை,மற்றும் தொழிநுட்ப உதவி உற்பட அரசின் பல்வேறுசலுகைகளை வழங்குவது.

### திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

- நுந்நிதி, சிறியமற்றும் நடுத்தர அளவு முயற்சியாண்மைப்பிரிவுகளின் அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு தேவையான கொள்கைதந்திரோபாயங்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை உருவாக்குதலும்அதற்குத்தேவையான வசதிகளை வழங்குதலும்.
- சந்தைத்தரவுகளை ஆய்வு செய்து சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளின் வளர்ச்சியைப்பாதிக்கும் பிரதானபிரச்சினைகளை இனங்கண்டுஅவற்றுக்காகதிறமையானதீர்வுகளைப்பெற்றுக்கொடுப்பது.
- பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு அரசினால் அமுல்படுத்தப்படும் மானியத்திட்டங்களின் முன்னேற்றஆய்வு மற்றும்அதற்குத்தேவையானகொள்கைகளை வகுத்தலுக்கான வசதிகளை வழங்குதல்.
- சந்தைத்தேவைகளுக்கேற்ப வங்கி காப்புறுதி சிறியமற்றும்நடுத்தர முயற்சியாண்மைகள் மற்றும் நுந்நிதி முயற்சியாண்மைப்பிரிவு நிதிப்பிரிவுகளுக்கான சட்டங்களை உருவாக்குதலும் அவற்றிற்குத்தேவையான வசதிகளை வழங்குதலும்.
- சிறிய மற்றும் நடுத்தர நுந்நிதி விவசாய முயற்சிப்பிரிவு வங்கி பணச்சந்தை மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய அரசின்வருடாந்தவரவு செலவுத்திட்டம தயாரித்தலுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- சிறியமற்றும் நடுத்தர நுந்நிதித்துறை முயற்சியாண்மைப்பிரிவு ஆரம்பவிவசாயப்பிரிவு மற்றும் ஏனையபிரிவுகளுக்குரிய வரவுசெலவுத்திட்டப்பிரேரணைகளை நடைமுறைக்கிடுதல் வெளிநாட்டுக்கடன் மூலம் நடைமுறைப்படுத்தும்திட்டங்களை செயற்படுத்துதல்.
- நுந்நிதி சிறிய மற்றும் நடுத்தரமுயற்சியாண்மையுடன் தொடர்புடையவிவசாயதொழிநுட்பமற்றும் சேவைத்துறை தொடர்பானபுள்ளிவிபரங்களைச் சேகரித்து அவற்றை ஆய்வு செய்துகாணப்படும் தடைகளைக் கண்டறிந்து கொள்கையளவில் தலையிட்டுத் தீர்த்துவைப்பது.

- அரச ஆதரவில்அமுல்படுத்தப்படும் சலுகைத்திட்டங்களைக்கண்டறிவது.
- அரச கொள்கைகளுக்கிணங்க நுந்நிதி சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைப்பிரிவின் அபிவிருத்திக்கான கருத்திட்டங்களுக்காக தேசிய வங்கி மற்றும் நிதி வசதிகளை வழங்குதல்.

## நிறுவனஒழுங்கமைப்புவரைபு




பிப - பிரதிப் பணிப்பாளர்
க - கணக்காளர்
உப - உதவிப் பணிப்பாளர்
ஆஉ -ஆராய்ச்சி உதவியாளர்
திஉ -திட்டமிடல் உதவியாளர்
தஉ - தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர்
முஉ -முகாமைத்துவ உதவியாளர்
சாரதி -சாரதி
காதொஉ -காரியாலய தொழில் உதவியாளர்

துறைகள்

நிச,ஆபி - நிநிச் சந்தையும், ஆரம்பப் பிரிவும நிருவாகமும்
நுநி நி - நுண் நிதி
சிநதொ - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள்
அநி, மூச - அபிவிருத்தி நிதியும், மூலதனச் சந்தையும்

# 2. அபிவிருத்தி நிதி

## 2.1 மேனோக்கு

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள், வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம், புதிய வியாபாரச் செயன்முறைகளை அறிமுகம் செய்தல், வறுமை மற்றும் பணவீக்கத்தினைக் குறைத்தல், ஏற்றத்தாழ்வற்ற சமத்துவமான அபிவிருத்திக்கு வழிவகுத்தல், மற்றும் சென்மதி நிலுவைக்குத் தீர்வு காணல் போன்றனவற்றிற்கு வழிவகுப்பதனால், அவை அவை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான பிரதான உந்து சக்திகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள், விவசாயம், தயாரிப்பு மற்றும் சேவைகள் போன்ற சகல துறைகளிலிருந்தும் பங்களிப்புச் செலுத்துவதன் மூலம் நாட்டின் மொத்த தொழில்முயற்சிகளில் 75 சதவீதத்திற்கும், வேலை வாய்ப்புக்களில் 45 சதவீதத்திற்கும் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 சதவீதிற்கும் பங்களிப்புச் செலுத்தும் அதே வேளை, இலங்கையின் சகல துறைகளையும் அபிவிருத்தி செய்வதில் முக்கிய பங்கை வகிக்கின்றது. இத்துறையின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு அதற்கான வழிகாட்டல்களைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக 2015 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறைக்கான தேசிய கொள்கை வேலைச் சட்டகம் ஒன்றினைத் தயாரித்து வெளியிட்டது.

நுண் நிதிச் சேவைகளை வழங்குவதில் நீண்ட கால வரலாற்றொன்றைக் கொண்டுள்ள இலங்கையின் நுண் நிதித்துறையானது ஒவ்வொரு வருடமும் குறிப்பிடத்தக்க அளவிலான முன்னேற்றச் செயலாற்றத்தினை அடைந்துள்ளது. இதன் விளைவாக, அரச மற்றும் தனியார் துறைகளின் வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற நுண்நிதிச் சேவைகளை வழங்கும் பல்வேறு வகையான நிறுவனங்கள் உருவாகி உள்ளன. அரச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் நுண்நிதி நிகழ்ச்சித் திட்டங்கள் பல காணப்படுகின்றன. நுண் நிதி நிறுவனங்கள் தமது சேவைகளை பொதுவான வேலைச் சட்டகமொன்றுக்குள் பயனாளிளுக்கு வழங்கக் கூடிய வகையில் நுண் நிதித் துறையை ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற இன்னோரன்ன நோக்கங்களுடன் 2015 ஆம் ஆண்டில் நுண்நிதிச் சட்ட மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில், அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு நிதி உதவித் திட்டங்களில், விவசாய உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட கொள்கை தொடர்பான பூர்வாங்க வேலைகள் மகத்தானவைகளாகும். உர மானிய நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து ஆரம்பித்து நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் வரை உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள் இரண்டிலும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் விவசாயிகளின் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கும், மற்றும் நாட்டில் உணவுப் பாதுகாப்பினை உருவாக்குவதற்கும் அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன் விளைவாக, நெல் உற்பத்தியை முகாமைத்துவம் செய்வதற்காக அரசாங்க வங்கிகள் மற்றும் திறைசேரியின் ஊடாக நிதி வசதிகளை வழங்குவதன் மூலம் அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அவற்றிற்கு சான்றாக அமைகின்றன. அதே போல, நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக அதிக அளவிலான வெளிப்படைத் தன்மை கொண்ட பொறிமுறையொன்றினை அறிமுகம் செய்வதன் மூலம் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் இது வரை காணாத வரலாறொன்றைக் கொண்ட நெற்தொகை இவ்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டது.

2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில், அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு நிதி உதவித் திட்டங்களில் விவசாய உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட கொள்கை தொடர்பான பூர்வாங்க வேலைகள் மகத்தானவைகளாகும். உர

மானிய நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் வரை உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள் இரண்டிலும் வெகுமதிகளை வழங்குவதன் மூலம் விவசாயிகளின் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கும், மற்றும் நாடு பூராவும் உணவுப் பாதுகாப்பினை ஸ்தாபிப்பதற்கும் அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆரசாங்க வங்கிகள் மற்றும் திறைசேரியின் ஊடாக நிதி உதவியை வழங்குவதன் மூலம் அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மிகையான நெல்லுற்பத்தியினை அரசாங்கத்தினால் சமாளிக்கக் கூடியதாக இருந்தது என்பதற்கு 2015 ஆம் நெல் அறுவடையின் மூலம் சாட்சி பகர்கின்றது. எனவே,. நேல் கொள்வனவிற்கு அதிக அளவிலான வெளிப்படைத் தன்மை கொண்ட முறையினை அறிமுகம் செய்வதன் மூலம் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் இது வரை கொள்வனவு செய்யப்பட்ட அதிக அளவான நெல் தொகையை இவ்வாண்டில் கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்தது.

மேலும், அநேகமான அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இருப்பது போன்று, உர மானியமானது இலங்கையின் விவசாயக் கொள்கையில் பிரதான ஆக்கக் கூறாக விளங்குகின்றது. ஆயினும், மானியமயப்படுத்தப்பட்ட உரத்தினை அளவுக்கதிகம் பயன்படுத்துவதன் காரணத்தினால் உர மானியத்தின் வினைத்திறன் தொடர்பாகவும், மற்றும் நிலையான தன்மை தொடர்பாகவும் கேள்விகள் எழுந்துள்ளன. உரத்தின் மிகையான பாவனையானது, மண், நீர் மாசடைதல், உணவுப் பாதுகாப்பு ஆகியனவற்றின் மீது நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, அதன் விளைவாக தீராத சிறுநீரக நோய்க்கும் வழிவகுத்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்டவைகளைக் கருத்திற் கொண்டு சமூக மற்றும் சூழல் தீங்குகளை தவிர்ப்பதன் மூலம் உற்பத்தித் திறனை உறுதிப்படுத்துவதோடு. விவசாயிகள் தமது விவசாய உள்ளீடுகளைத் தெரிவு செய்வதற்கான மிகவும் நெகிழ்ச்சிகரமான செயன்முறையொன்றுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அரசாங்கத்தினால் இது வரை நடைமுறைப்படுத்தப்பட்ட உர மானியக் கொள்கையைத் திருத்தம் செய்வதற்கு 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது.

## 2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி

### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கான தேசிய கொள்கை வேலைச்சட்டகம்

வேலை உருவாக்கம், மொத்த உள்ளநாட்டு உற்பத்திக்கான பங்களிப்பு, மற்றும் நாட்டின் ஏற்றத் தாழ்வற்ற சமத்துவமான அபிவிருத்தி ஆகியனவற்றிற்கு வழங்கப்படும் பங்களிப்பினை அடிப்படையாகக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறை , நாட்டின் மொத்தப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. இத்துறைக்கு உரிய முக்கியத்துவத்தினை அளிப்பதன் மூலம் இத்துறையினால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான வழிகாட்டலை வழங்குவதற்கு 2015 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறை தொடர்பான தேசிய கொள்கை வேலைச்சட்டகமொன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செலுத்தும் உலகளாவிய ரீதியில் போட்டித் திறன் கொண்ட, மாறக் கூடிய, புதுமையான மற்றும் தொழில்நுட்ப ரீதியாக இயங்கக் கூடிய, சூழல் ரீதியாக நட்புறவான, நிலையான குறிப்பிடத்தக்க அளவிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை உருவாக்குவதே சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறை தொடர்பான தேசிய கொள்கை வேலைச்சட்டகத்தின் தொலை நோக்காகும்.

தேவையான பொருத்தமான சுற்றாடல், தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்முயற்சிகளின் கலாச்சாரம், திறன்களின் அபிவிருத்தி, நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான பிரவேசத்தினை இலகுவாக்குதல், சந்தை வசதியளிப்பு, ஆராய்ச்சி அபிவிருத்தி போன்றவற்றிற்கு அவசியமான வசதிகளை வழங்குவதன் மூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் போட்டியிடக் கூடிய உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மட்டத்திலான பொருட்களையும், மற்றும்

சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் உற்பத்திகளின் வளர்ச்சியை ஊக்கவிப்பதே தேசிய கொள்கை வேலைச்சட்டகத்தின் செயற்பணியாகும்.
தாகும்.

மேலும், இக்கொள்கை வேலைச்சட்டகத்தின் மூலம் உள்நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை வரையறுப்பதற்கு முழுமையானதும், மற்றும் தனிப்பட்டதுமான வரைவிலக்கணமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பின்னர், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறை தொடர்பாக கொள்கை ரீதியான ஏதாவது தீர்மானமொன்றினை எடுக்கும் போது கொள்கைத் தயாரிப்பாளர்கள் இவ்வரைவிலக்கணத்தினைப் பயன்படுத்தலாம்.

**அட்டவணை 2.1> இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான வரைவிலக்கணம்**

| அளவு / துறை | அடிப்படை வகையீடு | நடுத்தர | சிறிய | நுண் |
|---|---|---|---|---|
| தயாரிப்புத் துறை | வருடாந்தப் புரள்வு | ரூபா. 251-750 மில்லியன் | ரூபா. 16-250 மில்லியன் | ரூபா 15 மில்லியனை விடக் குறைவான |
| | தொழிலாளர்களின் எண்ணிக்கை | 51-300 | 11-50 | 10 மில்லியனை விடக் குறைவான |
| சேவைகள் துறை | வருடாந்தப் புரள்வு | ரூபா..251-750 மில்லியன் | ரூபா. 16-250 மில்லியன் | ரூபா 15 மில்லியனை விடக் குறைவான |
| | தொழிலாளர்களின் எண்ணிக்கை | 51-200 | 11-50 | 10 மில்லியனை விடக் குறைவான |

மூலம்: சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்கான தேசியக் கொள்கை, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

மேலும், இச்சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் தொடர்பான தேசிய கொள்கை வேலைச்சட்டகத்தின் மூலம் பொருத்தமான சூழல், பொருத்தமான நவீன தொழில்நுட்பம், தொழில்முயற்சிச் சூழல், திறன் அபிவிருத்தி, நிதி வசதிகளுக்கான அணுகல், சந்தை வசதிகளை அளித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகிய பிரதான ஆறு துறைகளின் கீழ் கொள்கை ரீதியான வழிகாட்டல்களும் மற்றும் உபாயங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

### 2.2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான நிதி வசதிகள்


பாரம்பரிய வங்கிச் சட்டகத்திலிருந்து விடுபட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்,ஈடுபட்டுள்ள வியாபாரத்துறைக்குள் அடுத்த உயர்வான மட்டத்தை அடைவதற்கு அவசியமான ஆதரவை வழங்குவதற்காக அவர்களுக்கான நிதி வசதிகளை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் நிதி நிறுவனங்கள் தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. 2015 ஆம் ஆண்டிற்குள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 604,590 மில்லியன் நிதியை அரச மற்றும் தனியார் துறை வர்த்தக வங்கிகளினால் கடனாக வழங்கப்பட்டுள்ளதோடு, 2014 ஆம் ஆண்டில் இவ்வாறு வழங்கப்பட்ட நிதி ரூபா 521,385 மில்லியனாகும்.

**அட்டவணை 2.2 > அரச மற்றும் தனியார் துறையின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் - 2015**

| வங்கி | விவசாயம் | | சேவைகள் | | கைத்தொழில்கள் | | ஏனையவை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா. மில்லியன் | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா. மில்லியன் | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா. மில்லியன் | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா. மில்லியன் | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா. மில்லியன் |
| இலங்கை வங்கி | 937 | 3,485.00 | 286 | 877.00 | 639 | 2,230.00 | 26,724 | 59,311.00 | 28,586 | 65,903.00 |
| மக்கள் வங்கி | 340 | 529.55 | 396 | 1,227.40 | 274 | 1,029.18 | 603 | 1,206.85 | 1,613 | 3,992.98 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 1,176 | 754.00 | 89 | 57.00 | 1,321 | 831.00 | 25,655 | 18,809.00 | 28,241 | 20,451.00 |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 24 | 76.90 | 33 | 106.04 | 143 | 728.67 | 10 | 33.50 | 210 | 945.11 |
| சனச அபிவிருத்தி வங்கி | 358 | 234.35 | 17 | 10.85 | 11 | 16.54 | 1,029 | 736.82 | 1,415 | 998.55 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1,898 | 3,446.52 | 449 | 2,117.35 | 12,983 | 18,444.77 | 1,186 | 1,931.56 | 16,516 | 25,940.20 |
| டீஎப்சீசீ வங்கி | 538 | 4,924.23 | 3,415 | 15,654.73 | 1,872 | 13,085.27 | 2,006 | 4,331.50 | 7,831 | 37,995.73 |
| வர்த்தக வங்கி | 3,412 | 14,247.89 | 10,891 | 54,938.92 | 11,677 | 81,987.62 | 19,742 | 109,233.20 | 45,722 | 260,407.63 |
| சம்பத் வங்கி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி | 385 | 2,400.00 | 850 | 8,162.00 | 962 | 5,653.00 | 2,907 | 15,611.00 | 5,104 | 31,826.00 |
| செலான் வங்கி | 30 | 2,225.39 | 35 | 1,774.15 | 60 | 3,332.16 | 91 | 12,467.42 | 216 | 19,799.12 |
| ஹட்டன் நெ'னல் வங்கி | 6,754 | 10,499.00 | 15,625 | 63,929.00 | 4,391 | 17,521.00 | 1,820 | 5,184.00 | 28,590 | 97,133.00 |
| நேசன் ட்ரஸ்ட் வங்கி | 240 | 1,880.09 | 1,984 | 7,497.56 | 316 | 1,207.15 | 7,079 | 10,938.93 | 9,619 | 21,523.73 |
| ஸ்டேன்டார்ட் சார்டட் வங்கி | 1 | 55.00 | 34 | 500.00 | 58 | 581.00 | 1 | 1.00 | 94 | 1,137.00 |
| யூனியன் வங்கி | 186 | 1,166.67 | 616 | 2,441.18 | 1,539 | 3,139.73 | 2,976 | 9,789.40 | 5,317 | 16,536.98 |
| மொத்தம் | **16,279** | **45,924.59** | **34,720** | **159,293.18** | **36,246** | **149,787.09** | **91,829** | **249,585.18** | **179,074** | **604,590.03** |

மூலம்: தொடர்புடைய மூவங்கிகள்

2015 ஆம் ஆண்டில் அரச மற்றும் தனியார் துறை வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் எண்ணிக்கையில் 9 சதவீதம் விவசாயத் துறைக்கும், 20 சதவீதம் கைத்தொழில் துறைக்கும், 19 சதவீதம் சேவைகள் துறைக்கும் வழங்கப்பட்டுள்ளதோடு, 2014 ஆம் ஆண்டில் இத்தொகைகள் முறையே 12 சதவீதம், 15 சதவீதம், மற்றும் 25 சதவீதமாக மாற்றமடைந்துள்ளன. மேலும், 2015 ஆம் ஆண்டில், இம்மொத்தக் கடன்களின் எண்ணிக்கையில் 51 சதவீதம் ஏனைய துறைகளுக்கிடையில் பிரிந்து சென்றுள்ளதோடு, 2014 ஆம் ஆண்டில், அத்தொகை 49 சதவீதமாகக் காணப்பட்டது.




## 2.3 நுண் நிதியீடு

கடந்த சில வருடங்களாக இலங்கையில் நுண் நிதித்துறையானது, இலங்கையின் நுண் நிதித் துறையில் நம்ப முடியாத அளவுக்கு வளர்ச்சியொன்றைக் அடைந்துள்ளது. பல்வேறு நுண்நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் நிதி ரீதியான சேவைகள் சமூகத்தில் தேவையுள்ள சகல தரப்பினராலும் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு பரந்துள்ளதோடு, பிணையங்கள் எதுவுமின்றி குடும்பங்களின் வருமானம், நுகர்வு மட்டம், சொத்துக்களின் பெறுமதியை அதிகரித்தல் ஆகிய நடவடிக்கைகளின் போது விசேட பங்களிப்பொன்றைச் செலுத்தியுள்ளது. மேலும், நுண் நிதியீட்டின் மூலம் குறைந்த வருமானம் பெறுவோர் சேமிப்பதற்கு ஊக்குவிக்கப்படுவதோடு, அவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் பங்களிப்புச் செலுத்தியுள்ளது.

2015 ஆம் ஆண்டில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கான தேசிய கொள்கை வேலைச்சட்டகம் வெளியிடப்பட்டதோடு, அதில் நுண்நிதித் துறை மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதன் பிரகாரம், தொழிலாளர்கள் 10 பேரை விடக் குறைந்த,ரூபா 15 மில்லியனை விடக் குறைந்த வருடாந்த புரள்வினைக் கொண்ட உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் சகல தொழில்முயற்சியாளர்களும், நுண்நிதிக் குழுக்குள் உள்ளடக்கப்பட்டனர்.

2015 ஆம் ஆண்டில் நுண்நிதி ஒழுங்கு முறைச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய குறிக்கோள்களுடன் இணக்கப்பாட்டினை வைத்திருக்கும் நோக்கத்துடன் நிதிச் சபையினால் வழங்கப்படும் வழிகாட்டல்கள் மற்றும் தேசிய ஒழுங்கு முறைக் கொள்கைகளுக்கு ஏற்ப, பிரதான ஒழுங்குமுறைகள் 4 படைகளின் கீழ் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதன் பிரகாரம், கணிசமான அளவிலுள்ள நுண் நிதி நிறுவனங்களின் எண்ணிக்கைகள் அந்நிறுவனத்தின் செயற்பாடு மற்றும் நிறுவனக் கட்டமைப்பு ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு பிரதான 4 குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதோடு, இத்துறையின் செயற்பாடுகளை ஒழுங்கான

முறையில் பேணுவதற்காக நுண்நிதி அதிகார சபையை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் இத்துறையினால் அடையப் பெற்ற புதிய வெற்றிகளுடன் அரசாங்கத்தின் பிரதான பங்கும் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. குறைந்த வருமானமுடைய குடும்பங்களை மையமாகக் கொண்டு அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு நுண்நிதி நிகழ்ச்சித் திட்டங்கள் 2015 ஆண்டில், நடைமுறைப்படுத்தப்பட்டது.


**அட்டவணை 2.3 > பிரதான நுண் நதி நிறுவனங்களின் முன்னேற்றம் - 2015**

| நுண்நிதி நிறுவனங்கள் | கிளைகளின் எண்ணிக்கை | வைப்பாளர்களின் எண்ணிக்கை | கடன் பட்டோரின் எண்ணிக்கை | மொத்த வைப்புக்களின் எண்ணிக்கை (ரூபா. மில்லியன்) | மொத்த முதலீடு (ரூபா. மில்லியன்) | மொத்தக் கடனின் தொகுதி (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| திவிநெகும திணைக்களம் | 1,074 | 4,234,029 | 1,599,058 | 65,034 | 63,522 | 38,320 |
| கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 2,210 | 9,631,080 | 569,376 | 94,685 | 97,747 | 39,406 |
| கமநல சேவைகள் திணைக்களம் | 534 | 253,370 | 62,009 | 350 | 6,748 | 976 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 265 | 5,676,619 | 839,664 | 86,340 | 16,076 | 41,276 |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 8 | 56,145 | 8,555 | 500 | 5,506 | 3,371 |
| மொத்தம் | **4,091** | **19,851,243** | **3,078,662** | **246,909** | **189,599** | **123,349** |

மூலம்( அபிவிருத்தி நிதித் திணைக்களம்

அரசாங்கத்தின் பிரதான நிதி நிறுவனங்களினால் குறிப்பிடத்தக்க அளவிற்கு நுண்கடன் தொகையொன்று நாட்டிலுள்ள நிதித் தேவையுடைய நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2015 ஆண்டின் இறுதியில் பிரதான நிறவனங்களினால் நுண்நிதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடனின் அளவு ரூபா 123 மில்லியன்களைத் தாண்டியுள்ளது. அதில் திவி நெகும திணைக்களம் 31 சதவீதத்தினையும், (ரூபா 38 பில்லியன்), கூட்டுறவுத் திணைக்களம் 32 சதவீதத்தினையும் (ரூபா 39 பில்லியன்), பிரதேச அபிவிருத்தி வங்கி 33 சதவீதத்தினையும் (ரூபா 41 பில்லியன்) வழங்கியுள்ளன. 2015 ஆம் ஆண்டின் இறுதியில், வறிய மக்களின் கட்டாய சேமிப்புக்கள் ரூபா 217 பில்லியன்களை நெருங்கியிருந்ததோடு, அதில் ரூபா 156 பில்லியன்கள் நீண்ட கால மற்றும் குறுகிய கால முதலீடுகளில் இடப்பட்டுள்ளன.

**வரைபு 2.2 > முறையான வங்கிகள் மூலம் நுண்நிதித் துறைக்குப் கடன்களின் பகிர்வுகள் -2015**




2015 ஆம் ஆண்டில், வர்த்தக வங்கிகளினால், நுண்நிதித்து துறைக்குக் கடனாக வழங்கியுள்ள மொத்தப் பணம் ரூபா 175 பில்லியன்களாக இருந்ததோடு, அத்தொகையில்,ரூபா 101 பில்லியன்கள் இலங்கை வங்கியினால் புதிய முழுமையான கிராமிய கடன் முறைமை (சருசார), வறுமையை ஒழிக்கும் நுண் நிதிக் கருத்திட்டம் மற்றும் ‘‘சௌபாக்ய’’ ஆகிய கடன் திட்டங்களின் ஊடாக சிறிய அளவிலான கடன்களாக வழங்கப்பட்டுள்ளன. பிரதேச அபிவிருத்தி வங்கியும் மற்றும் மக்கள் வங்கியும் 2015 ஆம் ஆண்டில் முறையே ரூபா 50 மில்லியன் மற்றும் ரூபா 10 பில்லியன்களை நுண்நிதித் துறைக்குக் கடனாக வழங்கியுள்ளன. அரசாங்க வங்கிகளுக்கு ஒப்பீட்டு ரீதியில் தனியார் வங்கிகளான செலான் வங்கி, ஹட்டன் நெ‘னல் வங்கி, ஆகியனவற்றினால் குறிப்பிடத்தக்க அளவிற்கு கடன் தொகையொன்று கிராமியப் பிரதேசங்களில் நுண்நிதி வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது.


## 2.4 விவசாயத் துறையை மேம்படுத்தல்

### 2.4.1 விவசாயிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான உர மானியம்

உர மானியம் என்பது விவசாயத் துறையின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான பிரதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டமொன்றாகும். தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உர மானியமானது நெல் உள்ளடங்கலாக ஏனைய பயிர்களுக்கும் சலுகை அடிப்படையிலான விலையின் கீழ் உரத்தினைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பினை வழங்கியிருப்பதனால், விவசாயிகள் தமது உற்பத்திச் செலவினைக் குறைக்கக் கூடியதாக உள்ளது.

2015 ஆம் ஆண்டில் உர மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு ரூபா 49,570 மில்லியன்களாக இருந்ததோடு, அது 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவீனமான ரூபா 31,802 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 56 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு உர மானியத்திற்கு அதிக அளவிலான செலவினை மேற்கொண்டுள்ள ஆண்டாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு 2015 ஆம் ஆண்டில், செலவு அதிகரிப்பதற்கான காரணம், இதற்கு முன்னைய ஆண்டுகளில் உர மானியத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த நிலுவைப் பணத்தினைச் செலுத்தியமையினாலாகும். 2015 ஆம் ஆண்டில், உர


மானியத்திற்கு ஒதுக்கீடு செய்திருந்த ஏற்பாட்டில் 99 சதவீதம் இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.




**2.4.1.1நெற்பயிர்ச்செய்கைக்கான உர மானியம்**

2005 ஆம் ஆண்டிலிருந்து, நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்நிகழ்ச்சத் திட்டத்தின் கீழ் நெற்பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் பிரதான நேர் வடிவிலான மூன்று உர வகைகளில், 50 கிலோ கிராம் பொதியொன்று ரூபா 350 ∴ஸ்ரீ மானிய விலைக்குப் பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், டீ.எஸ்.பீ (ட்ரிபல் சுபர் போஸ்பேட்) மற்றும் எம். ஓ. பீ (மியுரியேட் ஒப் பொட்டே‘) ஆகிய உர வகைகள் கமநல சேவைகள் நிலையத்தின் ஊடாக நாடு பூராவும் விநியோகிக்கப்படும் வலையமைப்பின் ஊடாக வழங்கப்படும். நெல் உரத்தினை விநியோகிக்கும் பொறுப்பு அரசாங்கத்தின் உரக் கம்பனிகள் இரண்டின் ஊடாக பூரணமாக மேற்கொள்ளப்பட்டது.

50 கிலோ கிராம் நெல் உரப் பொதியொன்றுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சராசரி மானியம் சுமார் சந்தை விலையில் 88 சதவீதமாகும்.




2015 ஆம் ஆண்டானது இது வரை உயர்வான உற்பத்தியொன்றை பெற்றுக் கொடுத்த ஆண்டாகக் கருதப்படுகின்றது. இது வரை ஒப்பீட்டு ரீதியில் உயர்வான உற்பத்தியைப் பதிவு செய்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் உர மானியத்தினைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கையைப் போலவே வழங்கப்பட்ட உரத்தின் அளவும் குறைவடைந்துள்ளதோடு, அறுவடை செய்த தேறிய நிலப்பரப்பின் அளவும், நெல்லுற்பத்தியும் அதிகரித்துள்ளது. 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 அம் ஆண்டு வரை நெற்பயிர்ச்செய்கையின் உற்பத்தித் திறன் 2.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, அது 2010 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 4.4 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

**அட்டவணை 2.4 > உயர் விளைச்சலைக் கொண்ட ஆண்டுகளுடன் நெல் பயிர்ச்செய்கைத் தரவுகளின் ஒப்பீடு**

| விபரம் | உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உரத்தின் அளவு (மெ. தொன்) | அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு (ஹெக்.) | நெல் உற்பத்தி (மெ.தொ) | சராசரி விளைச்சல் (கிகி.⁄.ஹெக்) |
|---|---|---|---|---|---|
| பெரும் போகம் 2009/10 | 1,100,543 | 263,512 | 573,788 | 2,629,566 | 4,583 |
| சிறு போகம் 2010 | 785,966 | 186,556 | 376,024 | 1,671,054 | 4,444 |
| **2010 மொத்தம்** | **1,886,509** | **450,068** | **949,812** | **4,300,620** | **4,528** |
| பெரும் போகம் 2012/13 | 1,044,343 | 247,078 | 664,804 | 2,846,276 | 4,281 |
| 2013 லுயடய | 658,560 | 113,434 | 402,534 | 1,774,452 | 4,408 |
| **2013 மொத்தம்** | **1,702,903** | **360,512** | **1,067,338** | **4,620,728** | **4,329** |
| பெரும் போகம் 2014/15 | 998,710 | 197,305 | 659,283 | 2,876,987 | 4,364 |
| சிறு போகம் 2015 | 663,106 | 89,915 | 429,091 | 1,942,408 | 4,527 |
| **2015 மொத்தம்** | **1,661,816** | **287,220** | **1,088,374** | **4,819,395** | **4,428** |

இது வரை இரசாயன உரத்தின் பாவனைக்கும், உற்பத்தித் திறனுக்குமிடையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு இணைத் தொடர்பொன்று இல்லையென்பதை அநேகமான ஆராய்ச்சியாளர்கள் காட்டியுள்ளார்கள். தற்போது நடைமறைப்படுத்தப்படும் உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காரணமாக பாரிய அளவிவான உரம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுவதோடு, உரத்தின் அளவுக்கு அதிகமான பாவனையினாலும், தவறான பாவனையினாலும் சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் பலவற்றிற்கு முகங் கொடுக்க நேரிட்டுள்ளது.


### 2.4.1.2 நெல் அல்லாத ஏனைய பயிர்களுக்கான உர மானியம்

2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஏனைய பயிர்களுக்கான உர மானியமானது கீழே உள்ளவாறு சலுகை அடிப்படையிலான விலைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- 50 கிலோ கிராம் எந்தவொரு உரப் பொதியும் ரூபா1,200/- சலுகை அடிப்படையிலான விலைக்கு வழங்கல்.

- 50 கிலோ கிராம் எந்தவொரு கலப்பு உரப் பொதியும் ரூபா 1,300/- சலுகை அடிப்படையிலான விலைக்கு வழங்கல்.

இம்மானியத்தின் கீழ் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கைக்கான கொள்ளளவை ஒரு பயிரிலிருந்து பல பயிர்களுக்கு விரிவாக்குவதற்கும், நெல்லைத் தவிர ஏனைய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இம்மானியத்தின் கீழ் 50 கிலோ கிராம் நேர் உரப் பொதியொன்று சந்தை விலையின் சதவீதமாக அரசாங்கத்தினால் ஏற்கப்படும் நன்கொடை நிதி 28 சதவீதத்திற்கும், 80 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருந்தது.



வரைபு 2.5 > ஏனைய பயிர்களுக்கான உர மானியம் - 2015

அரசாங்க உரக் கம்பனிகள் ஏனைய பயிர்களுக்கான உர மானியத்தின் கீழ் 40 சதவீதம் அளவிலான கேள்வியைப் பூர்த்தி செய்துள்ள அதே வேளை, எஞ்சிய 60 சதவீத உரத்திற்கான கேள்வியானது, தனியார் துறைக் கம்பனிகளினால் பூர்த்தி செயயப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் ஏனைய பயிர்களுக்கான உர மானியமாக ரூபா 16,889 மில்லியன் தொகையினை செலவு செய்ய வேண்டியிருந்ததோடு, அது 2014 ஆம் ஆண்டில்

மேற்கொள்ளப்பட்ட செலவான ரூபா 15,020 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் உர மானியத்திற்கு அதிக அளவிலான செலவினை மேற்கொண்ட ஆண்டாகக் கருதப்படுகின்றது.


**அட்டவணை 2.5 > ஏனைய பயிர்களுக்கான உர விநியோகத்தின் முன்னெற்றச் செயலாற்றம்**

| ஆண்டு | விநியோகிக்கப்பட்ட அளவு (மெதொ) | அரசாங்க மானிய அர்ப்பணிப்பு (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| 2008 | 170,020 | 2,067 |
| 2009 | 232,668 | 3,817 |
| 2010 | 281,679 | 7,096 |
| 2011 | 335,323 | 9,706 |
| 2012 | 380,829 | 11,564 |
| 2013 | 379,866 | 13,800 |
| 2014 | 407,439 | 15,020 |
| 2015 | 463,672 | 16,889 |

*மூலம: அபிவிருத்தி நிதித் திணைக்களம்*

2015 ஆம் ஆண்டில் ஏனைய பயிர்களுக்கான உர மானியத்தின் கீழ் 463,672 மெட்ரிக் தொன் உரம் வழங்கப்பட்டுள்ளதோடு, அதில் 390,549 மெட்ரிக் தொன் ஏனைய பயிர்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வரைபு - 2.6 > நெல் அல்லாத ஏனைய பயிர்களுக்கான உரத்தின் பயன்பாடு - 2015 (மெதொ)**




### 2.4.1.3உரத்திற்கு நிதி மானியத்தினை அறிமுகம் செய்தல்

விவசாயத் துறைக்கு வழங்கப்பட்ட பல்வேறு வகையான ஊக்குவிப்புக்களையும், மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத் துறையினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பினையும் கவனத்தில் கொள்ளும் போது இந்த ஊக்குவிப்புக்களில்

இடைக்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி இலக்குகளை அடைய முடியாமல் போயுள்ளமையானது அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உயர்வான மானிய விலையொன்றின் கீழ் உரத்தை வழங்குவதன் மூலம் உரத்தை அதிக அளவில் பயன்படுத்துவது தொடர்பாகவும், தவறான முறையில் பயன்படுத்துவது தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்பது உணரப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, நெல் பயிரிடப்படும் பிரதேசங்களில் பரந்துள்ள சிறுநீரக நோய் போன்ற சுகாதாரப் பிரச்சினைகளும், சுற்றாடல் பிரச்சினைகளும் நீர் மற்றும் மண் மாசுபடுவதன் காரணமாக ஏற்படுகின்றன. எனவே, அரசாங்கம் உர மானியக் கொள்கையினை மீண்டும் ஒரு முறை திருத்தம் செய்வதற்குத் தீர்மானம் எடுத்துள்ளதோடு, அதன் மூலம் சமூக, சூழல் இடையூறுகளை குறைத்துக் கொள்வதற்கும், விவசாயிகள் தமது விவசாய உள்ளீடுகளை மிகவும் நெகிழ்ச்சிகரமான முறையில் தெரிவு செய்து உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உர மானியத்திற்குப் பதிலாக ஒரு விவசாயிக்குக் அதிக பட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு ஏக்கருக்கு ரூபா 25,000.∵ஸ்ரீ என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இரண்டு ஹெக்டேயர்கள் வரை உரத்தினைக் கொள்வனவு செய்வதற்கான நிதி மானியத்தினை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இரண்டு ஹெக்டேயர்களுக்குச் சொந்தமான சிறிய அளவிலான விவசாயி ஒருவர் ஒரு வருடத்திற்கு ரூபா 50,000.∵ஸ்ரீ நிதி மானியத்தினைப் பெற்றுக் கொள்வார். இதன் மூலம் விவசாயிகள் தமக்குக் கிடைக்கின்ற நிதி மானியத்தினை இரசாயன உரம் அல்லது அசேதன உரத்தினைக் கொள்வனவு செய்வதற்குச் செலவு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதோடு, திறந்த சந்தை விலைகளின் கீழ் எந்தவொரு உர வகையையும் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யக் கூடியதாக உள்ளது.

## 2.4.2 புதிய முழுமையான கிராமிய கடன் பிரேரணைத் திட்டம்

விவசாயிகள், விவசாய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வோர், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலாளர்களின் உயர்வான கேள்வி மாத்திரமல்லாமல் பங்கேற்பு நிதி நிறுவனங்களின் இணக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு புதிய முழுமையான கடன் பிரேரணைத் திட்டத்தின் கீழ் வங்கிகள் தமது சொந்த வளங்களை பயன்படுத்தி வழங்கப்பட்ட கடனுக்கான வட்டி மானியம் வழங்குதலானது அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களில் அநேகமானவை சிறிய அளவிலான விவசாயிகளினாலேயே பயன்படுத்தப்படுகின்றன. கிராமியத் துறையின் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் அம்மக்களின் வறுமையை ஒழிப்பதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு இப்பிரேரணைத் திட்டம் வழிவகுக்கின்றது. விவசாய நடவடிக்கைகளுக்காக விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டி வீதத்துக்கு கடன் வழங்கப்படுவதோடு, அதற்காக 5 சதவீத வருடாந்த வட்டி மானியமும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. நெல், மிளகாய், சோளம், பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு, மரக்கறி, உள்ளடங்கலாக ஏனைய 33 பிரதான பயிர்களுக்கு இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும்.

இது வரை கடன் வழங்கிய பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு மேலதிகமாக 2015 ஆம் ஆண்டில், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் டூர்னுகுஊரூ இக்கடன் பிரேரணைத் திட்டத்துடன் ஒன்றிணைந்துள்ளதோடு, அதன் பிரகாரம், மொத்த பங்கேற்பு நிதி நிறுவனங்களின் எண்ணிக்கையை 10 வரை அதிகரித்துள்ளது. திறைசேரியினால் 2015 ஆம் ஆண்டிற்குள் ரூபா 276 மில்லியன் வட்டி மானியமாக கடன் வழங்கிய வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

சிறிய அளவிலான விவசாயிகளின் உற்பத்திகளுக்குக் குறுகிய காலக் கடனை வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட குதங்களுக்கான பற்றுச் சீட்டு நிதியீட்டுக் கருத்திட்டம் 2015 ஜூலை மாதம் 6 ஆம் திகதியிலிருந்து இக்கடன் பிரேரணைத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டது. அதற்கமைய, களஞ்சியங்களில் தமது உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தி குறுகிய பயிர்ச்செய்கைக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் சிறிய அளவிலான விவசாயிகள் இக்கடன் பிரேரணைத் திட்டத்தின் கீழ் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமையைப் பெறுகின்றனர். இங்கு


பற்றுச்சீட்டினை வங்கியில் பிணையாக வைத்து கடன் நிதி வழங்கப்படும். இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் விவசாயிகள களஞ்சியப்படுத்தப்படும் உற்பத்திப் பொருட்களின் சந்தைப் பெறுமதியில் 50 சதவீத கடன் நிதியை கடனைத் திரும்பச் செலுத்தும் காலப்பிரிவாக அதிக பட்சம் 270 தினங்களுக்கு உட்பட்டு பெற்றுக் கொள்ள முடியும்.

**அட்டவணை 2.6 > புதிய முழுமையான கிராமிய கடன் பிரேரணைத் திட்டத்தின் கீழ் கடன் பகிர்வுகள் - 2015**


| பயிர்கள் | அதிக பட்சி கடன் எல்லை (ரூபா) | அதிக பட்ச காணி அலகுகள் (ஏக்கர்கள்) | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்) | காணியின் பரப்பு (ஏக்கர்கள்) |
|---|---|---|---|---|---|
| நெல் - நீர்ப்பாசன | 250,000 | 10 | 62,742 | | |
| மானாவாரி | 150,000 | 10 | | 4,738 | 214,011 |
| சோளம் | 250,000 | 10 | 10,995 | 632 | 27,946 |
| உருளைக் கிழங்கு | 350,000 | 2 | 3,634 | 524 | 3,938 |
| வெங்காயம் | 190,000 | 2 | 7,582 | 881 | 11,339 |
| மிளகாய் | 130,000 | 2 | 2,380 | 136 | 3,148 |
| காய்கறிகள் | 40,000 - 180,000 | 2 | 1,881 | 154 | 2,723 |
| ஏனையவை - இஞ்சி | 140,000 | 2 | 1,319 | 71 | 2,615 |
| **மொத்தம்** | | | **90,533** | **7,138** | **265,720** |

*மூலம்: பிரதேச அபிவிருத்தி வங்கி , இலங்கை மத்திய வங்கி*

நாட்டில் நிலவிய சிறந்த பொருளாதார நிலைமைகளின் காரணமாகவும், அமைதியான சூழ்நிலையின் காரணமாகவும், 2015 ஆம் ஆண்டில் புதிய முழுமையான கிராமிய கடன் பிரேரணைக் கடன் திட்டத்தின் கீழ் கடனுக்கான கேள்வி அதிகரிப்பதற்குக் காரணமாகியது. அதன் பிரகாரம், 2014 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டிலும் பயனாளிகளின் எண்ணிக்கை 86,143 இலிருந்து 90,533 வரை அதிகரித்துள்ளதோடு, மொத்தமாக வழங்கப்பட்ட கடனின் அளவு ரூபா 6,749 மில்லியினிலிருந்து ரூபா 7,138 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. வழங்கப்பட்டுள்ள கடனின் அளவிற்கு ஏற்ப, கூடியது ரூபா 250,000.ஸ்ரீ விற்கு உட்பட்டு நெல் விவசாயிகளுக்கு அதிகமான கடன் தொகையொன்றினை விடுவித்துள்ளதோடு, அது 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடனின் அளவு 69 சதவீதமாகும். 2015 ஆம் ஆண்டிற்குள் இக்கடன் திட்டத்தின் கீழ் 265,719 ஏக்கரில் விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதோடு, அதில் 80 சதவீதம் நெல் விவசாயத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.




2015 ஆம் ஆண்டில், வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடனின் அளவையும், பயனாளிகளின் பிரதேச பரவலையும் கருத்திற் கொள்ளும் போது, மொத்தக் கடனின் அளவான ரூபா 7,138 மில்லியனில் 19 சதவீதமான ரூபா 1,363 மில்லியன் அனுராதபுர மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது. அதே போல, ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் பொலன்னறுவை, அம்பாந்தோட்டை, பதுளை, மற்றும் மாத்தளை மாவட்டங்களில் இக்கடன் பிரேரணைத் திட்டத்தின் கீழ் நன்மை அடைந்த எண்ணிக்கையில் உயர்வான பெறுமதியொன்றினை காட்டுகின்றது.




பயிர்களின் பரவலுக்கு ஏற்பப் பார்க்கும் போது, 2015 ஆம் ஆண்டில், அதிகமான கடன் தொகையானது நெல் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, அது 69 சதவீதமாகவும் இருந்தது. இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட பயிர்களாக

சோளம், பெரிய வெங்காயம், போன்றன முறையே நெல் பயிர்ச்செய்கைகயைத் தொடர்ந்து உயர்வான கடன் தொகையைப் பெற்றுக் கொண்டுள்ளன.

### 2.4.3 பயிர்ச்செய்கைக் கடனுக்கான நிவாரணம்

விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திற்கான விவசாயிகளின் பங்களிப்பானது மகத்தான ஒரு இடத்தை வகிக்கின்றது. ஆயினும், கடந்த அண்மைக் காலங்களில் வெள்ளங்கள், வறட்சிகள், பூச்சிகள், இயற்கை அழிவுகள், உள்நாட்டு சிவில் கிளர்ச்சிகள், போன்ற அவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளின் காரணமாக அவர்களின் பயிர்கள் அழிவடைந்தமையினால் விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இந்நிலைமையில், விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீளச்செலுத்த முடியாத நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டது. விவசாயிகளினால் முகங்கொடுக்க நேர்ந்த பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு, அவற்றைக் குறைக்கும் நோக்கத்துடன் அவர்கள் அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட பயிர்ச்செய்கைக் கடன்களில் 50 சதவீதத்தை பதிவழிப்பதற்கு 2015 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முன் மொழியப்பட்டது.

நெல் உட்பட ஏனைய களப் பயிர்களை பயிரிடுவதற்காக பயிர்ச்செய்கைக் கடன் திட்டத்தின் கீழ் அரச வங்கிகளிடமிருந்து கூடியது ரூபா 100,000 ∴ஸ்ரீ வரை பெற்றுக் கொண்ட தனிப்பட்ட விவசாயிகளும், செயற்படாத வகையீட்டுக்கு மாற்றப்பட்டவர்களும் இந்நிவாரணப் பொதியினைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையைப் பெறுகின்றனர். குறிப்பிட்ட வங்கிகளினால் செயற்பாடத வகையீட்டிற்குள் உள்ளடங்கும் பயிர்ச்செய்கைக் கடன்களின் மொத்த மூலதன நிலுவையில் வங்கிகளினால் பதிவழிக்கப்பட் 50 சதவீதமும், இழப்புக்களும் திறைசேரியினால் வங்கிகளுக்கு மீளச் செலுத்தப்படும். அதன் பிரகாரம், 2015 வரவு செலவுத்திட்டத்திலிருந்து அரசாங்கத்தினால் ரூபா 2,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.


**அட்டவணை 2.7 > அரச வங்கிகளிடமிருந்து விவசாயிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கைக் கடன்களுக்கான நிவாரணம்**

| வங்கியின் பெயர் | கடன்களின் எண்ணிக்கை | பதிவழிக்கப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| மக்கள் வங்கி | 25,540 | 234.65 |
| இலங்கை வங்கி | 21,918 | 374.02 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 9,506 | 176.06 |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 100 | 1.9 |
| **மொத்தம்** | **57,064** | **786.63** |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்*

அரசாங்க வங்கிகள் மூலம் பயிர்ச்செய்கைக் கடன்களைப் பெற்றுக் கொண்ட 57,064 விவசாயிகளுக்கு இந்நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டதோடு, அரசாங்கத்தினால் இதற்காக ரூபா 786 மில்லியன் நிதித்தொகை வட்டி மானியமாகவும் செலவிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் பதிவழிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் 48 சதவீதம் (ரூபா 374 மில்லியன்) இலங்கை வங்கிக்கு ஈடு செய்யப்பட்டது. மேலும்,ரூபா 234 மில்லியன்களும்,ரூபா 176 மில்லியன்களும் முறையே மக்கள் வங்கிக்கும், மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கும் வழங்கப்பட்டன.

**வரைபு 2.9 > அரச வங்கிகளிடமிருந்து விவசாயிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்களுக்கான நிவாரணம்**




நிவாரண விநியோகத்தினைப் பொருத்த வரை, கூடுதலான பயனாளிகள் பொலன்னறுவை ( 18,859), அனுராதபுரம் (11,851), மற்றும் அம்பாந்தோட்டை (4,645) மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டனர். பகிரப்பட்ட மொத்தத் தொகையில் 50 சதவீதம் நெல் பயிரிடப்படும் பிரதான மாவட்டங்களின் பயனாளிகளுக்கு இடையில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 2.4.4 விவசாயிகளுக்கான பயிர் காப்புறுதி

வறட்சி, வெள்ளம், காட்டு யானைகள் போன்றவற்றினால் விவசாயிகளின் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக “கெத்தட்ட அருண பொஹொர திரிய” எனப்படும் பயிர் காப்புறுதித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரேரணைத் திட்டம் ஆரம்பத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், நெல் விவசாயிகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட இக்காப்புறுதி முறைமை ஏனைய சகல பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான விவசாயிகளுக்கும் 2014 ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்டதோடு, கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் போது தேவையற்ற தாமதங்கள் ஏற்படாதவாறு தவிர்ப்பதற்காக 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையானது இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக நியமிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 1,006 மில்லியன் தொகை காப்புறுதித் தவணைக் கட்டணமாக அறவிடப்பட்டதோடு, பயிர்களின் அழிவுக்காக ரூபா 1,038 மில்லியன் தொகை 138,062 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

### 2.4.5 விவசாயிகளுக்கான சமூக பாதுகாப்பு

விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டத்தினால் நாட்டின் விவசாய அபிவிருத்திக்காக தமது இளமைக்காலத்தைக் கழித்த முதிய விவசாயிகளுக்கு அதிக அளவிலான நன்மைகளை வழங்கக் கூடியதாக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில் இத்திட்டத்தின் கீழ் 136,421 முதிய விவசாயிகள் இதன் மூலம் நன்மை அடைந்துள்ளதோடு, 2015 ஆம் ஆண்டில் மொத்தம் 2,481.5 மில்லியன் அவர்களுக்கிடையில் விநியோகிக்கப்பட்டது. விவசாயிகளின் ஓய்வூதிய நிதியமானது தன்னிறைவு மட்டத்தில் இருக்காததனால், உரிய நேரத்தில் ஓய்வூதியத்தினை வழங்குவதற்காக மாதாந்தம் ரூபா 180 மில்லியனை விவசாய மற்றும் கமநல காப்புறுதிச்சபைக்கு வழங்கியது. தற்போது, தகுதியுள்ள விவசாயிகள் தமது மாதாந்த ஓய்வூதியத்தினை தபால் அலுவலகத்தின் ஊடாக ஒவ்வொரு மாததத்தின் முதலாவது கிழமையில் பெற்றுக் கொள்கின்றார்கள்.

### 2.4.6 பெருந்தோட்டத் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

பெருந்தோட்டத் துறையானது, அந்நியச் செலாவணி உழைப்பில் பெரும் பங்கை வகிப்பதால், பெருந்தோட்டத்துறையில் ஆரோக்கியமான செயலாற்றுகையானது நாட்டிற்கு மிக இன்றியமையாததாக விளங்குகின்றது. அரசாங்கம் சிறு உடமை பெருந்தோட்டத்துறையை ஊக்குவிப்பதற்காக அதிக அளவிலான ஊக்குவிப்புக்களையும்,, மானியங்களையும் வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டில் அதன் உறுதியான அர்ப்பணிப்பபைக் காட்டியுள்ளது.

இந்நாட்டின் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19 சதவீதத்திற்கும், மொத்த ஏற்றுமதியில் 17.5 சதவீதத்திற்கும் பங்களிப்புச் செலுத்துகின்றது. தற்போது பெருந்தோட்டக் கைத்தொழில் துறை மீது சிறிய அளவிலான பெருந்தோட்ட உடமையாளர்களே பங்களிப்புச் செலுத்துவதோடு, 10 ஏக்கருக்குக் குறைவான தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட உடமையாளர்களும் மற்றும் 5 ஏக்கருக்குக் குறைவான தென்னந்தோட்ட உடமையாளர்களும் இச்சிறிய அளவிலான பெருந்தோட்ட உடமையாளர்களுக்குள் உள்ளடங்குகின்றனர். மேலும், இச்சிறிய அளவிலான பெருந்தோட்டக் கைத்தொழில் துறை மொத்த தேயிலை உற்பத்தியில் 72 சதவீதத்திற்கும், மற்றும் மொத்த இறப்பர் உற்பத்தியில் "65 சதவீதத்திற்கும் , தெங்கு உற்பத்தியில் 82 சதவீத்திற்கும் பங்களிப்புச் செலுத்துகின்றது.

**அட்டவணை 2.8 > சிறு உடமை பெருந்தோட்டத் துறையின் செயலாற்றம் 2010 – 2015**

| ஆண்டு | தேயிலை | | இறப்பர் | | தேங்காய் | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பு (ஹெக்) | மொத்த உற்பத்தி (கிகி மில்) | பரப்பு (ஹெக்) | மொத்த உற்பத்தி (கிகி மில்) | பரப்பு (ஹெக்) | மொத்த உற்பத்தி (மில். தேங்காய்கள்) |
| 2010 | 204,619 | 331 | 125,645 | 153 | 394,836 | 1,900 |
| 2011 | 206,104 | 328 | 128,120 | 158 | 394,836 | 2,303 |
| 2012 | 203,020 | 328 | 130,780 | 152 | 394,836 | 2,411 |
| 2013 | 202,408 | 340 | 133,668 | 130 | 394,836 | 2,061 |
| 2014 | 202,800 | 338 | 134,137 | 99 | 394,836 | 2,890 |
| 2015 | 202,800 | 329 | 134,906 | 89 | 394,836 | 3,027 |

*மூலம்: பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கைத் தேயிலைச் சபை*

இச்சிறிய அளவிலான பெருந்தோட்டக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோரை ஊக்குவிக்கும் நோக்குடன் தேயிலை மற்றும் இறப்பர் மீள் பயிரிடுவதற்கும், புதிதாக பயிரிடுவதற்கும் அரசாங்கத்தினால் மானியங்கள் வழங்கப்படுகின்றன. அதன் பிரகாரம், தேயிலை மீள் பயிரிடுவதற்கும், புதிதாக பயிரிடுவதற்கும் ஒரு ஹெக்டேயருக்கு

முறையே ரூபா 500,000,ரூபா 400,000 மானியமும், இறப்பர் மீள் பயிரிடுவதற்கும், புதிதாகப் பயிரிடுவதற்கும் ஒரு ஹெக்டேயருக்கு முறையே ரூபா 175,000 ,ரூபா 150,000 மானியமும் வழங்கப்பட்டன.

### 2.4.7 இயற்கை இறப்பருக்கான உத்தரவாத விலையொன்றினை வழங்குதல்

2015 வரவு செலவுத்திட்டத்துக்கு ஏற்ப, சிறிய அளவிலான இறப்பர் தோட்ட உடமையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இயற்கை இறப்பர் ஒரு கிலோ கிராமிற்கு ரூபா 300.்.ஸ்ரீ உத்தரவாத விலையொன்றினை 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் இவ்வுத்தரவாத விலையானது, புகை அடித்த தட்டை விரிப்பான இறப்பருக்கு (ஆர் எஸ் எஸ் 1,2,3,4 மற்றும் 5) மாத்திரம் வழங்கப்பட்டதோடு, பின்னர் சிறிய அளவிலான இறப்பர் பால் உற்பத்தியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளைக் கருத்திற் கொண்டு இவ்வுத்தரவாத விலையை இறப்பர் பாலுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும், சிறிய அளவிலான இறப்பர் தோட்ட உடமையாளர்களை ஊக்குவிப்பதற்கும், மற்றும் இக்கைத்தொழிலின் நீண்ட கால நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் 2015 இடைக்கால் வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளின் ஊடாக ஒரு கிலொ கிராமுக்கான உத்தரவாத விலையானது ரூபா 350 வரை அதிகரிக்கப்பட்டது. அதன் பிரகாரம், இறப்பர் பெருந்தோட்ட சிறு உடமையாளர்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியின் மீது ஈடுபடுத்தும் நோக்குடன் இவ்வுத்தரவாத விலை முறைமை 2015 ஏப்ரில் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு, உள்நாட்டுச் சந்தையில் இறப்பருக்கான விலையை அடிப்படையாகக் கொண்டு நான்கு குழுக்களின் கீழ் இதற்கு உரித்துடைய பெருந்தோட்ட சிறு உடமையாளர்களுக்கு குறிப்பிட்ட விலை வித்தியாசத்தினை இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக வழங்கியது. இப்பிரேரணைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டில், அரசாங்கத்தினால் ரூபா 2,317.75 ஸ்ரீ தொகை செலவிடப்பட்டது.

**அட்டவணை 2.9 > இயற்கை இறப்பருக்கான உத்தரவாத விலையை வழங்குவதற்கு பயன்படுத்திய வகையீடுகள்**

| வகையீடு | உத்தரவாதமளிக்கப்பட்ட விலை | 30.03.2015 இல் உள்ளூர் சந்தை விலை ( ஒரு கி.கிராமுக்கு ரூபா) | செலுத்தப்பட வேண்டிய மானியம் (ஒரு கிகிராமுக்கு ரூபா) |
|---|---|---|---|
| ஆர்எஸ்எஸ் 1 ரூ ஆர்எஸ்எஸ் 2 | 350 | 210 | 140 |
| ஆர்எஸ்எஸ் 3 | 325 | 200 | 125 |
| ஆர்எஸ்எஸ் 4 ரூஆர்எஸ்எஸ்5 | 300 | 190 | 110 |
| லேடெக்ஸ் | 300 | 195 | 105 |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்*

### 2.4.8 பச்சை தேயிலைக் கொழுந்துக்கு உத்தரவாத விலையொன்றினைப் பெற்றுக் கொடுத்தல்

பச்சை தேயிலைக் கொழுந்துக்கு சந்தையில் காணப்பட்ட விலையானது குறிப்பிடத்தக்க அளவிற்கு வீழ்ச்சியடைந்ததனால், நாட்டின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 72 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செலுத்தும் தேயிலை சிறு உடமையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்காக பச்சைத் தேயிலைக் கொழுந்துக்கு உத்தரவாத விலையொன்றினை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்தது. அதன் பிரகாரம், பச்சைத் தேயிலைக்

கொழுந்து ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 80/- ஸ்ரீ தற்போது நடைமுறையிலுள்ள 712 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு பச்சைத் தேயிலைக் கொழுந்தை வழங்கும் 400,000 இற்கும் நெருங்கிய சிறு தேயிலைத் தோட்ட உடமையாளர்களுக்கு 2015 ஏப்ரில் மாதத்திலிருந்து வழங்குவதற்கு முன் மொழியப்பட்டது. இலங்கைத் தேயிலைச் சபையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட " இப்பிரேரணைத் திட்டத்திற்கு ஏற்ப, சிறு தேயிலைத் தோட்ட உடமையாளர்களுக்கு ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்துக்கு ரூபா 80/- ஸ்ரீ வை விடக் குறைவான விலையைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் கொழும்பு தேயிலை ஏல விற்பனை விலையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட விலை வித்தியாசம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மொத்தத் தேயிலை உற்பத்தியினையும் மற்றும் வருடாந்த தேயிலை ஏற்றுமதி வருமானத்தினையும் முறையே 30 கிலோ கிராம் மில்லியன்களினாலும்,ரூபா 9 பில்லியன்களினாலும் உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இவ்வுத்தரவாத விலை முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டிற்கு ரூபா 5,000 மில்லியன் 2015 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், அரசாங்கம் உண்மையில் இதற்காகச் செலவிட்ட தொகை ரூபா 6,738 மில்லியன்களாகும்.

### 2.4.9 சிறிய அளவிலான தேயிலைத் தொழிற்சாலைகளின் உடமையாளர்களுக்கான தொழில் மூலதன கடன் பிரேரணைத திட்டம்

தேயிலையின் விலையானது வீழ்ச்சியடைந்ததன் காரணமாக பதிவு செய்துள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு அவர்களின் தொழில் மூலதனத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக குறுகிய கால அடிப்படையில் கடன் பிரேரணைத் திட்டமொன்றை நடைமறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், இக்கடன் பிரேரணைத் திட்டம் நிதி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கைத் தேயிலை சபையினால் அரசமற்றும் தனியார் துறை வர்த்தக வங்கிகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

இக்கடனுக்கு வருடாந்தம் 6 சதவீத வட்டி அறவிடப்படுவதோடு, 2 சதவீத வட்டி மானியத்தினை இக்கடன் பிரேரணைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரம் இலங்கை அரசாங்கத்தினால் பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படும். இரண்டு வருடங்களின் பின்னர் மொத்த வட்டியும் குறிப்பிட்ட தேயிலைத் தொழிற்சாலைகளின் உடமையாளர்களினால் செலுத்தப்படல் வேண்டும். இக்கடன் பிரேரணைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவதற்கு அரசாங்கத்தினால் வருடாந்தம் ரூபா 258 மில்லியன் வீதம் இரண்டு வருட காலப்பிரிவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம்,2015 அம் ஆண்டில், தேயிலைச் சபைக்கு 551 கடன் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, அவற்றில் 531 விண்ணப்பங்களுக்கு அண்ணளவாக ரூபா 10,137 மில்லியன் தொகையை கடன் பிரேரணைத் திட்டத்தின் கீழ் கடன் வசதியை வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

## ,2.5 உணவுப் பாதுகாப்பு


### 2.5.1 நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம்

நாட்டின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் நெல்லானது பிரதான பங்கை வகிக்கின்றது. அரசாங்கத்தினால் கடந்த ஆண்டுகளில, உர மானியம் வழங்கல், நெல்லுக்கான உத்தரவாத விலை, சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தின் கீழ் பயிர்ச்செய்கைக் கடன் தொழில்நுட்ப மற்றும் நீடிப்புச் சேவைகள் போன்றவற்றின் மூலம் நெல் விவசாயிகள் மட்டுமல்லாமல் நெல்லுற்பத்தியும் ஊக்குவிக்கப்பட்டது அதன் பிரகாரம், நிரம்பல் தரப்பில் ஏற்பட்ட பல இடையூறுகளைத் தவிர நெல்லுற்பத்தியானது படிப்படியாக அதிகரித்துள்ளது. இது வரை அதிகரித்துள்ள அதிக அளவிலான நெல்லுற்பத்தியான மெட்ரிக் தொன் 4.8 மில்லியன் அளவானது 2015 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. இதனை 2014 ஆம் ஆண்டின் நெல்லுற்பத்தியுடன் ஒப்பிடுகையில்

42 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. இவ்வாறான பின்னணியில், நெல்லின் விலையை உறுதியான மட்டத்தில் பேணுதலானது சவாலான ஒரு விடயமாகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில், அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் (இதற்கு முன்னர் உணவுப் பாதுகாப்பு அமைச்சாக அழைக்கப்பட்டது) நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டில், நெல் மூலம் 335,839 மெட்ரிக் தொன் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் 2014/15 பெரும் போகத்தில் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூபா 7,500 மில்லியன் செலவு செய்யப்பட்டதோடு, கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொகையானது 160,569 மெட்ரிக் தொன்களாகும்.

2015 சிறு போகத்தில் அரச வங்கிகளான மக்கள் வங்கியினாலும், மற்றும் இலங்கை வங்கியினாலும் வழங்கப்பட்ட ரூபா 7,950 மில்லியன்களைப் பயன்படுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் தொகை 175,270 மெட்ரிக் தொன்களாகும். அதன் பிரகாரம், நெல் கொள்வனவு செய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் இது வரை மேற்கொள்ளப்பட்ட உயர்வான செலவானது 2015 ஆம் ஆண்டில் பதியப்பட்டுள்ளது. நெல் கொள்வனவு செய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளிப்படைத் தன்மையினை விருத்தி செய்வதன் மூலம் மொசடி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய வாயப்புக்களைக் குறைப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நெல் விவசாயிகளைப் பதிவு செய்வதற்கான புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**வரைபு 2.10 > மொத்த நெல்லுற்பத்தி 2000 - 2015**




2015 வரவு செலவுத் திட்டப் பிரேரணை மூலம் கீரி சம்பா நெல் மற்றும் ஏனைய சம்பா நெல் வகைகளுக்கு ஒரு கிலோ கிராமுக்கான விலை ரூபா 50/- , ஏனைய நெல் வகைககளில் ஒரு கிலோ கிராமுக்கான விலை ரூபா 45/- ஆகவும் உத்தரவாத விலையானது விதிக்கப்பட்டதுஇ றுதிப்படுத்தப்பட்டது. இதனை 2014 ஆம் ஆண்டில், நெல்லுக்கான அரசாங்கத்தின் உத்தரவாத விலையுடன் ஒப்பிடுகையில் 20 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. நெல்லின் ஒரு அலகுக்கான உற்பத்தி விலை நீர்ப்பாசன நீரைப் பயன்படுத்தும் பிரதேசங்களில் ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 18.95, மற்றும் மழை நீரைப் பயன்படுத்தும் பிரதேசங்களில் ஒரு கிலோ கிராம் ரூபா 25.57 வீதம் ஒரு கிலோ கிராமுக்கான சாதாரண உற்பத்திச் செலவு ரூபா 22/- வாகும். அதன் பிரகாரம் , ஒரு கிலோ கிராமுக்கு விவசாயிகளுக்கு ரூபா 25/- இலாபம் கிடைத்தது. நெல் சந்தைப்படுத்தும் சபையினால் ஒவ்வொரு விவசாயியிடமும் அதிக பட்சம் 2000 கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்தமையினால் ஒரு விவசாயிக்கு ரூபா 50,000 அதிக பட்ச இலாபமொன்றினை உழைத்துக் கொள்ள முடிந்துள்ளது. ஆயினும், இந்த இலாபமானது அரசாங்கத்தின் நெல்லைக் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெல்லின் விற்பனை விலை மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாக, சந்தைப் பொறிமுறைக்கு ஏற்ப நெல்லின் உற்பத்திச் செலவுடன் பொருந்தக் கூடியவாறு நுகர்வோரினால் தாங்கக் கூடிய

விலையொன்றினை உறுதிப்படுத்துவதன் மூலம் நெல்லுக்கான அரசாங்கத்தின் உத்தரவாத விலை திருத்தம் செய்யப்பட்டது.

நெல்லுக்கான நடைமுறையிலுள்ள உத்தரவாத விலையினை மீளாய்வு செய்யும் போது, உற்பத்திச் செலவு, நுகர்வோரினால் எதிர்பார்க்கப்பட்ட சந்தை அரிசி விலை, நெல்லின் விற்பனை விலையில் ஏற்படக் கூடிய நட்டங்களைத் தடுக்கும் நோக்குடன் கவனத்தில் கொள்ளக் கூடிய நியாயமான விற்பனை விலையொன்றை வழங்குவதோடு, அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தில் ஏற்படக் கூடிய மோசடிகளுக்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்தல் உள்ளடங்கலாக பல்வேறு காரணிகள் மீது கவனம் செலுத்தப்படடுள்ளது. அதன் பிரகாரம், கீரி சம்பா நெல் ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 50/- வீதமும், சம்பா நெல் ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 41/- வீதமும், நாடு நெல் ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 38/- வீதமும் விலைகளைத் திருத்தம் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளன. 2016 பெப்ரவரி மாதத்திலிருந்து 2016 ஏப்ரில் மாதம் வரையிலான காலப்பிரிவில் ரூபா ரூபா.மில்லியன 6,240 செலவில் 2015/16 பெரும் பொகத்தில் 160,000 மெட்ரிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்பட்டது. 2016 மே மாதம் 10 ஆம் திகதிக்கு ரூபா 5,141 மில்லியன் செலவில் 132,021 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.10 >அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு**

| பருவம் | நாடு (மெதொ)) | சம்பா (மெதொ) | மொத்தம் (மெதொ) | பெறுமதி (ரூபா.மில்லியன்) |
|---|---|---|---|---|
| 2009/10 பெரும் போகம் | 63,850 | 6,919 | 70,769 | 1,995 |
| 2010 சிறு போகம் | 83,819 | 27,910 | 111,729 | 3,184 |
| **மொத்தம்** | **147,669** | **34,829** | **182,498** | **5,179** |
| 2010/11 பெரும் போகம் | 2,913 | 556 | 3,469 | 98 |
| 2011 சிறு போகம் | 58,967 | 16,205 | 75,172 | 2,137 |
| **மொத்தம்** | **61,880** | **16,761** | **78,641** | **2,235** |
| 2011/12 பெரும் போகம் | 107,319 | 8,467 | 115,786 | 3,259 |
| 2012 சிறு போகம் | 9,936 | 540 | 10,476 | 294 |
| **மொத்தம்** | **117,255** | **9,007** | **126,262** | **3,553** |
| 2012/13 பெரும் போகம் | 107,445 | 31,205 | 138,650 | 4,530 |
| 2013 சிறு போகம் | 81,834 | 12,542 | 94,376 | 3,058 |
| **மொத்தம்** | **189,279** | **43,747** | **233,026** | **7,588** |
| 2013/14 பெரும் போகம் | 3971 | 592 | 4563 | 148 |
| 2014 சிறு போகம் | 0 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **3,971** | **592** | **4,563** | **148** |
| 2014/15 பெரும் போகம் | 126,203 | 34,366 | 160,569 | 7,510 |
| 2015 சிறு போகம் | 162,775 | 12,495 | 175,270 | 7,950 |
| **மொத்தம்** | **288,978** | **46,861** | **335,839** | **15,460** |
| **முழு மொத்தம்** | **809,032** | **151,797** | **960,829** | **34,163** |

*மூலம்: நெல் சந்தைப்படுத்தும் சபை*

நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் துறையினால் வழங்கப்பட்ட பங்களிப்பானது குறிப்பிடத்தக்கதாகும். அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 34,440 மில்லியன் பெறுமதியான வாக்குறுதிக் கடன்

வசதிகளை வழங்குவதன் மூலம் அரச துறை நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆதரவை வழங்கின. இது 2014 அம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 27,225 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் சுமார் 27 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. 2015 ஆம் ஆண்டில், அரச வங்கிகளினால் வழங்கப்பட்ட மொத்த வாக்குறுதிக் கடன் தொகையில் 71 சதவீதம் தனியார் தறைக்கு வழங்கப்பட்டது.

**அட்டவணை 2.11 > நெல் கொள்வனவிற்காக தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் - 2015**

| வங்¢ | 2014⁄.15 பெரும் போகம் | | 2015 சிறு போகம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை (ரூபா . மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை (ரூபா . மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை (ரூபா . மில்லியன்) |
| மக்கள் வங்கி | 143 | 1,176.93 | 87 | 673.4 | 230 | 1,850.33 |
| இலங்கை வங்கி | 348 | 9,424.89 | 267 | 12,830.31 | 615 | 22,255.20 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 15 | 34.93 | 44 | 187.82 | 59 | 222.75 |
| **அரச வங்கிகளின் மொத்தம்** | **506** | **10,636.75** | **398** | **13,691.53** | **904** | **24,328.28** |
| வர்த்தக வங்கி | 39 | 134.85 | 98 | 343.32 | 137 | 478.17 |
| சம்பத் வங்கி | 185 | 1,564.75 | 138 | 2,188.16 | 323 | 3,752.91 |
| டீஎப்சீசீ வங்கி | 25 | 830.15 | 28 | 739.95 | 53 | 1,570.10 |
| செலான் வங்கி | 36 | 186.76 | 36 | 199.85 | 72 | 386.61 |
| தேசிய அபிவிவிருத்தி வங்கி | 16 | 711.20 | 30 | 715.20 | 46 | 1,426.40 |
| ஹட்டன் நெ‘னல் வங்கி | 152 | 1,368.40 | 144 | 1,129.60 | 296 | 2,498 |
| **தனியார் வங்கிகளின் மொத்தம்** | **453** | **4,796.11** | **474** | **5,316.08** | **927** | **10,112.19** |
| **முழு மொத்தம்** | **959** | **15,432.86** | **872** | **19,007.61** | **1,831** | **34,440.47** |

*மூலம்: குறிப்பிட்ட வங்கிகள்*

## 2.5.2 களஞ்சிய வசதிகளும், இலத்திரனியல் குதங்களுக்கான பற்றுச் சீட்டின் அறிமுகமும்

உலக வங்கியின் உதவியின் கீழ் இலங்கை அரசாங்கத்தினால் நெல்,சோளம், சோயா, எள்ளு, மிளகு, பட்டாணிக் கடலை, உழுந்து போன்ற தானிய வகைகளை அறுவடைக் காலத்தில் களஞ்சியப்படுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட விவசாய மாவட்டங்களில் நவீன தொழில்நுட்பத்துடனான களஞ்சியசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஆதற்கு அமைய, களஞ்சியப்படுத்தப்பட்ட தானியங்களைப் பிணையாக வைத்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு விவசாயிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் இலத்திரனியல் குதங்களுக்கான பற்றுச் சீட்டு நிதியீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அமைய, அனுராதபுரம்,

மொனராகலை, மற்றும் மன்னார் மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் அனுராதபுரம் மற்றும் மொனராகலை மாவட்டங்களின் களஞ்சியங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, அவற்றின் கொள்ளளவு 16,000 மெட்ரிக் தொன்களாகும். அனுராதபுரம் உபுல் தெனியாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள களஞ்சியசாலையில் 49 விவசாயிகள் தமது விவசாயப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தியுள்ளதோடு, அவர்களில் 19 விவசாயிகள் தமது விவசாயப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை ஈடாக வைத்து குறுகிய காலக் கடன் வசதிகளை பெற்றுக் கொண்டுள்ளதோடு, மொனராகலை மற்றும் புத்தளைக் களஞ்சியசாலைகளில் 8 விவசாயிகள் தமது விவசாயப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தியுள்ளதோடு, அதில் இரண்டு பேர் 2015 ஆம் ஆண்டு இறுதியில் தமது விவசாயப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை ஈடாக வைத்து குறுகிய காலக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்

உபுல்தெனிய மற்றும் புத்தளைக் களஞ்சியசாலைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இலத்திரனியல் குதங்களுக்கான பற்றுச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அதனை முதன் முதலாக இலங்கையில் நிதி நிறுவனங்கள் இம்முறைமையின் ஊடாக கடன் வழங்குவதனை நடைமுறைப்படுத்தியது. கிராமியப் பிரதேசங்களில் விவசாயிகளுக்காக இத்தானியங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை ஈடாக வைத்து கடன் வசதிகளை பெற்றுக் கொள்வதானது நிதி நிறுவனங்களுக்கு பிரதியீட்டு முறைமையொன்றாக உள்ளதோடு, அது பிரதான சவாலாகவும் அமைந்துள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் வெற்றியைக் கருத்திற் கொண்டு, பொலன்னறுவை, கிளிநொச்சி, இரத்தினபுரி, ஆகிய மாவட்டங்களில் மூன்று புதிய களஞ்சியசாலைகளை நிர்மாணிப்பதற்காக 2016 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பிரேரணையொன்று முன் வைக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் பிரதான களஞ்சியசாலைகள் மூன்றிற்கு மேலதிகமாக மாத்தளை, அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் பெரிய வெங்காயத்தினைக் களஞ்சியப்படுத்துவதற்கு குடும்ப மட்டத்தில் களஞ்சியங்கள் விவசாயிகளுக்கு தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டது. அறுவடைக் காலத்தில் ஏற்படும் சந்தைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பெரிய வெங்காயத்தினைப் பயரிடும் விவசாயிகளுக்கு இம்மேலதிக செயற்பாடுகளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தப் பெரிய வெங்காயத்தின் ம் களஞ்சிய இயலளவு 3,730 மெட்ரிக் தொன்களாக இருந்ததோடு, அது மாத்தளை, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகலை ஆகிய மாவட்டங்களில் முறையே 1,535 மெட்ரிக் தொன், 1,425 மெட்ரிக் தொன், 470 மெட்ரிக் மற்றும் 300 மெட்ரிக் தெரான்களாக வெவ்வேறாக காணப்பட்டன.

### 2.5.3 உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான அரிசி நன்கொடை

இது வரை ஒரு போதும் அறிக்கையிடப்படாதவாறு, 2013 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இலங்கையின் உயர்வான வருடாந்த நெல்லுற்பத்தியின் அறுவடையானது, இலங்கையில் நெல் மிகையொன்றை அறிக்கையிட்டது. அதன் பிரகாரம், மிகையாகவுள்ள நெல்லிருப்பினை முகாமை செய்யும் அதே வேளை, பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அரிசி 50,000 மெட்ரிக் தொன்களை வழங்குவதற்கு இணக்கப்பாட்டினை தெரிவித்தது.

1. இலங்கை உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியைப் பெறுனர் நிலையிலிருந்து உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அரிசியினை வர்த்தக ரீதியாக வழங்கும் வழங்குனர் நிலைக்கு மாறுதல்.

2. கடந்த காலத்தில் இலங்கையில் உள்நாட்டு நெருக்கடியின் காரணமாக புலம் பெயர்ந்த நபர்கள் மற்றும் சுனாமி மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளான மக்களுக்கு உணவினை வழங்குவதன் மூலம் வழங்கிய உதவியினைப் பாராட்டி எமது நாடு அடைந்துள்ள அபிவிருத்தியின் நன்மைகளை உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்ச்சியாகப் பகிர்ந்து கொள்வதன் மூலம் அந்நிறுவனத்துடனான இரு தரப்பு உறவினைப் பலப்படுத்தல்.

இச்செயன்முறையின் முதலாவது பூர்வாங்க நடவடிக்கையாக இலங்கை அரசாங்கத்தினால் 10,000 மெட்ரிக் தொன் இலங்கையின் ''மனிதாபிமான ஒருமைப்பாட்டின்'' கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உலக உணவ நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்திற்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதோடு, எஞ்சிய 40,000 மெட்ரிக் தொன்களையும் சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட உலக உணவு நிகழ்ச்சித் திட்ட உறுப்பு நாடுகளுக்கு இடையில் விநியோகிக்கப்படும். குறிப்பிட்ட ஆண்டொன்றில் விநியோகிப்பதற்கான அரிசியின் அளவைத் தீர்மானிப்பதானது உள்நாட்டு நுகர்வுக்கு அவசியமான அளவினை ஒதுக்கீடு செய்ததன் பின்னர் மீதியாகவுள்ள அரிசியின் மீதும் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோளையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது.

அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டின் இறுதியில், அரசாங்கத்தினால் 2015 இல் வழங்கிய 292 மெட்ரிக் தொன் அரிசியுடன் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்த படி 3,341 மெட்ரிக் தொன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 6,341 மெட்ரிக் தொன் அரிசியை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் மொத்தம் ரூபா 232.02 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### 2.5.4 கால்நடை உற்பத்தித் துறையின் அபிவிருத்தி

தற்போது இலங்கையின் கோழிப்பண்ணைத் துறையானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும், ஏற்றுமதி வருமானத்திலும் பங்களிப்புச் செலுத்துவதில் உயர்வான போக்கொன்றைக் காட்டும் கோழி உற்பத்தித் துறையானது தற்போது துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. எனவே, இத்துறையில் எழக் கூடிய பிரச்சினைகளைக் கூடிய விரைவில் உரிய நேரத்தில் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில், இலங்கையின் கோழிப் பண்ணை உற்பத்தித்துறை கோழி இறைச்சி 164,450 மெட்ரிக் தொன்களையும், 1,899 மில்லியன் கோழி முட்டைகளையும் உற்பத்தி செய்துள்ளது. இத்தொகையுடன் 2014 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கோழி இறைச்சி 150,320 மெட்ரிக் தொன்களுடனும், 1,721 மில்லியன்களுடனும் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும், தமது உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகள் பலவற்றிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்நாட்டின் பிரதான கோழி சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் பலர் சர்வதேச சந்தைகளை நோக்கிப் பிரவேசிப்பதற்கு ஆரம்பித்துள்ளார்கள்.

கோழி உணவு உற்பத்தியில் 55 சதவீதம் அளவிலான பங்களிப்பினைச் செலுத்துவதனால் சோளமானது கோழி உணவுகளில் பிரதான கூட்டுப் பொருள்களுள் ஒன்றாக விளங்குகின்றது. எனவே, கோழி சார்ந்த உற்பத்திப் பொருட்களின் உற்பத்திச் செலவில் சோளம் அதிகளவில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. சோளத்தினைப் பயிர் செய்யும் பிரதேசங்களில் பலத்த மழை காரணமாக 2015 ஆம் ஆண்டில், எதிர்பார்க்கப்பட்ட சோள அறுவடை வீழ்ச்சியடைந்தது. மேலும், 2015 ஆம் ஆண்டில், மதிப்பிடப்பட்ட சோள அறுவடையானது 277,336 மெட்ரிக் தொன்களை அறிக்கையிட்டதோடு, கால்நடை உணவு உற்பத்திப் பொருட்களுக்கு அவசியமான சோளத்தின் வருடாந்தக் கேள்வி 350,000 – 400,000 மெட்ரிக் தொன்களுக்கு இடைப்பட்டதாக இருந்தது. விே'டமாக கோழிப் பண்ணை சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்களின் பிரதான உள்ளீடான சோள இருப்பானது, உள்நாட்டுச் சந்தைகளில் போதிய அளவு காணப்படாமையானது, கால்நடை உணவு உற்பத்திப் பொருட்களுக்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். "இவ்விடயத்தினைக் கருத்திற் கொண்டு, கால்நடை உணவு உற்பத்தியாளர்கள் இரண்டு மாதங்களுக்கு அவசியமான சோளத்தினை இறக்குமதி செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. . அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதத்திலிருந்து 103,000 மெட்ரிக் தொன் சோளம் கால்நடை உணவு உற்பத்தியாளர்களினால் இறக்குமதி செய்யப்பட்டது. "

## 2.6 இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்களுக்கான வி'ே ட ஊக்குவிப்புக்கள்

### 2.6.1 சிரே'ட பிரஜைகளுக்கு வழங்கப்படும் வி'ே ட வட்டி வீதம்

தமது வாலிப பருவத்தில் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் பங்களிப்பினைச் செலுத்திய சிரேட்'ட பிரஜைகளுக்கு நிதி ரீதியாக நிலையான உறுதியான, பாதுகாக்கப்பட்ட ஓய்வு பெற்ற வாழ்க்கையொன்றினை வழங்கும் நோக்கத்துடன் 60 வயதைத் தாண்டிய சிரே'ட பிரஜைகளுக்கு நிலையான வைப்புக்கான வி'ே ட வட்டி வீதமொன்றினை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், சிரே'ட பிரஜைகளுக்கு 12 சதவீத வி'ே ட வட்டி வீதமொன்றினை வழங்குவதற்கு கடந்த அரசாங்கத்தினால் 2015 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பிரேரணை ஒன்று கொண்டு முன்மொழியப்பட்டது.

மேலும், 2015 இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் இவ்வி'ே ட வட்டி வீதம் 15 சதவீதம் வரை தற்போதைய அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலோ அல்லது அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட வி'ே ட வங்கியொன்றிலோ தமது மொத்த வைப்புப் பெறுமதியாக ரூபா 1 மில்லியன் அல்லது அதற்குக் குறைவாக தனி நபரின் அடிப்படையில் வைப்பிலிடும் சிரே'ட பிரஜைகள் 15 சதவீதமான இவ்வி'ே ட வருடாந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமை உடையவர்களாவார்கள். அதே போல, இப்பிரேரணையை நடைமுறைப்படுத்தும் போது குறிப்பிட்ட வங்கிகளில் தமது சாதாரண வட்டி வீதத்திற்கு மேலதிகமாக செலுத்துவதற்கு ஏற்படும் மேலதிகச் செலவு காலாண்டு அடிப்படையில் திறைசேரியினால் அவ்வங்கிகளுக்கு மீள்நிதிப்படுத்தப்படும்.

2015 ஆம் ஆண்டில், சிரே'ட பிரஜைகளுக்கான இம்மேலதிகமான வட்டியினைச் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் ரூபா 3,661 மில்லியன் தொகை குறிப்பிட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும், அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கும் செலவு ஈடு செய்யப்படும்.

**அட்டவணை 2.12 > சிரே'ட பிரஜைகளுக்கான வி'ே ட வட்டித் திட்டத்தின் காலாண்டு வாரியான முன்னேற்றச் செயலாற்றம் - 2015**

| விபரம் | பயனாளிகள் | செலவு ஈடு (ரூபா) |
|---|---|---|
| காலண்டு 1 | 91,240 | 181,864,667.33 |
| காலாண்டு 2 | 175,782 | 897,029,886.26 |
| காலாண்டு 3 | 196,106 | 1,185,585,616.89 |
| காலாண்டு 4 | 229,777 | 1,396,660,535.30 |
| **மொத்தம்** | | **3,661,140,705.78** |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்*

மேலும், சிரே'ட பிரஜைகளுக்கு அதிகளவிலான நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நிதிக்கம்பனிகளுக்கு நடைமுறையிலுள்ள சிரே'ட பிரஜைகளுக்கான வைப்புத் திட்டத்தினை நீடிப்பதற்கு 2016 வரவு செலவுத்திட்டத்தில் பிரேரணையொன்று முன் வைக்கப்பட்டது. அதன் பிரகாரம், 55 வயதுக்கு மேற்பட்ட இலங்கையின் சிரே'ட பிரஜைகளினால் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நிதி நிறுவனங்களில் ஆரம்பிக்கப்படும் ரூபா 15 மில்லியன் இல்லது அதற்குக் குறைவான தனி நபர் ஒரு வருடத்திற்கான நிரந்தர வைப்புக்களுக்கு 15 சதவீத வி'ே ட வருடாந்த வட்டி வீதமொன்றினை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித் திட்டத்தினை மேலும் , 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நிதிக்கம்பனிகளின் ஊடாகத் தொடர்வதற்காக ரூபா 4,000 மில்லியனகளும், இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா 1,500 மில்லியன்களும் அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.6.2 சமூக ரீதியாக மீள ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்களுக்கான சுய தொழில் கடன் திட்டம்

சமூக ரீதியாக மீள ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்களுக்கான சுய தொழில் கடன் திட்டம் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டதோடு, இத்திட்டமானது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி ஆகியனவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கடன் திட்டத்தின் கீழ் எல் டீ டீ ஈ நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளில் தொடர்பு பட்டு மனிதாபிமான செயற்பாடுகளின் இறுதியில் பாதுகாப்புப் படையில் சரணடைந்தவர்களுக்கும், கைது செய்யப்பட்டவர்களுக்கும் பின்னர் புனர் வாழ்வளிக்கப்பட்டு சமூக ரீதியாக மீள ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்களுக்கு கடன் வசதியளிக்கப்படும். “

சமூக ரீதியாக மீள ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்கள் தமது வாழ்வாதார நடவடிக்கைளை வெற்றிகரமாக ஆரம்பிப்பதற்காக இக்கடன் பிரேரணைத் திட்டமானது அவர்களுக்கு மகத்தான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இவ்விளைஞர்கள் அவர்களது சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பின் மேற்பார்வை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளார்கள். மேலும், இக்கடன் பிரேரணைத் திட்டத்தின் ஊடாக அவர்கள் சிறந்த பிரஜைகளாக மாறுவதற்கும் மற்றும் அவர்களின் வாழ்வாதார நோக்கங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான பொருளாதாரச் சூழல் ஒன்றை உருவாக்குவதற்கும் இக்கடன் பிரேரணைத் திட்டம் உறுதியான அடிப்படையொன்றையும் உருவாக்கும். அதன் பிரகாரம், தகைமை பெற்ற பயிலுனர்கள் கமத்தொழில் மற்றும் பாற்பண்ணை நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், விவசாய நடவடிக்கைகள், கால்நடை வளர்ப்பு போன்றவற்றிற்கான நீடிப்புச் சேவைகள், உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில்முயற்சி உள்நாட்டுக் கைத்தொழில்கள், கடற்றொழில் நடவடிக்கைகள். சிறிய வர்த்தக நடவடிக்கைகள் போன்றனவற்றிற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், ஆரம்ப இரண்டாந்தர உயர் கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சிகளைத் தொடர்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கும் ஒரு வருட தயவுக் காலப்பிரிவுக்கு உட்பட்டு 10 வருட மீளச் செலுத்தல் காலப்பிரிவின் அடிப்படையில் அதிக பட்சம் ரூபா 250,000/- வரையிலான கடன் நிதியைப் பெற்றுக் கொள்ளக கூடியதாக உள்ளது.

முதலாம் கட்டத்தின் கீழ் ரூபா 300 மில்லியன் கடன் நிதியை இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் இலங்கை சேமிப்பு வங்கி ஆகியவற்றின் ஊடாக முறையே ரூபா 125 மில்லியன்,ரூபா 100 மில்லியன் மற்றும் ரூபா 75 மில்லியன்கள் வழங்கப்பட்டன. இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் திறைசேரியினால் 8 சதவீத வட்டி மானியமொன்று பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. 2015.12.31 ஆம் திகதியிலான இக்கடன் பிரேரணைத் திட்டத்தின் முதலாம் கட்டத்தின் முன்னேற்றச் செயலாற்றமானது பின்வருமாறு:

**அட்டவணை 2.13 > 31.12.2015 அம் திகதியில் சமூக ரீதியாக மீள் ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்களின் கடன் திட்டத்தின் முன்னேற்றச் செயலாற்றம்**

| மாவட்டம் | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | பகிரப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 288 | 48,336,000 |
| கிளிநொச்சி | 342 | 51,984,000 |
| முல்லைத்தீவு | 430 | 78,310,000 |
| வவுனியா | 307 | 47,075,000 |
| மன்னார் | 270 | 48,700,000 |
| மட்டக்களப்பு | 74 | 11,075,000 |
| திருகோணமலை | 72 | 14,250,000 |
| அம்பாறை | 11 | 1,750,000 |
| ஏனைய மாவட்டங்கள் | 5 | 1,150,000 |
| **மொத்தம்** | **1799** | **302,630,000** |

*மூலம்: புனர்வாழ்வு அதிகார சபை*

இத்திட்டத்தின் பகிர்வுகளைப் பொருத்த வரை, 2015 ஆம் ஆண்டளவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1,799 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். உயர்வான கடன் பகிர்வுகளை முல்லைத் தீவு மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் 430 பயிலுனர்கள் நன்மை அடைந்துள்ளார்கள். 2015 டிசம்பர் மாதமளவில் வட்டி மானியமாக பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு ரூபா 42 மில்லியன்கள் செலுத்தப்பட்டுள்ளன. இக்கடன் திட்டத்தின் 2 ஆம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 525 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, 2 ஆம் கட்டத்தின் ஒதுக்கீட்டின் ஊடாக சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் சமூகத்தினுள் மீள ஒன்றிணைக்கப்பட்ட நபர்களுக்கு ஒரே வகையான கடன் வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.6.3 சிரேஷ்ட ஊடகர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான விசேட மோட்டார் வாகனக் கடன் பிரேரணைத் திட்டம்

25 வருடங்கள் தொடர்ச்சியான சேவைக் காலப்பிரிவை உடைய சிரேஷ்ட ஊடகர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான விசேட மோட்டார் வாகனக் கடன் பிரேரணைத் திட்டம் 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளுக்கு ஏற்ப ஆரம்பிக்கப்பட்டது. இக்கடன் பிரேரணைத் திட்டம் ஊடக மற்றும் தகவல் அமைச்சு, கலாச்சார மற்றும் கலை அமைச்சு ஆகியனவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அதன் கீழ் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்ய அதிக பட்சம் ரூபா 1.2 மில்லியன்களுக்கு உட்பட்டு வட்டியில்லாக் கடன் தொகையை 7 வருடங்களில் மீண்டும் செலுத்தும் அடிப்படையில் வழங்கப்பட்டது. இக்கடன் பிரேரணைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட பங்கேற்பு நிதி நிறுவனங்கள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியனவாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு உரிய மொத்த வட்டித் தொகை 10 – 14 சதவீதம் வரையிலான வீதத்தின் கீழ் வட்டி மானியமாக பூரணமாக அரசாங்கத்தினால் குறிப்பிட்ட வங்கிகளுக்கு மீளச் செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் 2015.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றச் செயலாற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.14 > 2015.12.31 ஆம் திகதியில் சிரேஷ்ட ஊடகர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் கடன் திட்டத்தின் முன்னேற்றச் செயலாற்றம்**

| நிறுவனம் | வழங்கப்பட்ட கடன் களின் எண்ணிக்கை | பகிரப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | செலுத்தப்பட்ட மானியம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| ஊடக மற்றும் தகவல் அமைச்சு | 340 | 395 | 91 |
| கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | 580 | 676 | 115 |
| **மொத்தம்** | **920** | **1,071** | **206** |

*மூலம்: அரசாங்க வங்கிகள்*

ஊடக மற்றும் தகவல் அமைச்சு, கலாச்சார மற்றும் கலை அமைச்சினால் கடன் வழங்குவதற்காக விண்ணப்பதாரிகளை பரிந்துரை செய்து, இக்கடன் பிரேரணைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதான தொழிற்பாடொன்றை நிறைவேற்றுகின்றது. அதற்கு அமைய, 2015 ஆம் ஆண்டு இறுதியில் 920 பயனாளிகளுக்கு ரூபா 1,071 மில்லியன் கடன் வசதிகளை வழங்கியுள்ளது. திறைசேரியினால் ரூபா 206 மில்லியன்கள் வட்டி மானியத்தினை வழங்குவதற்காக அக்காலப்பிரிவில் செலவிடப்பட்டுள்ளது.

## 2.6.4 நகை அடகு முற்பணத்திற்கான நிவாரணம் வழங்கல்

உயர்வடைந்து செல்லும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக அரசாங்கத்தினால் பல்வேறு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உயர்வடைந்து செல்லும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையின் காரணமாக மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் உடனடிக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஞாபகச் சின்னங்களாக தமது பெற்றோரிடமிருந்தும், நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற அவர்களது நகைகளை அடகு வைத்திருந்தனர். அநேகமான மக்கள் இப்பணத்தினை தமது நாளாந்த நுகர்விற்காகப் பயன்படுத்தியுள்ளதோடு, இறுதியாக வங்கிகளினால் அறவிடப்படும் அடைய முடியாத வட்டி வீதத்தின் காரணமாக அக்கடன்களை தீர்ப்பனவு செய்ய முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, அதிகாரமளிக்கப்படாத மூலங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொண்ட வறிய மக்கள் இந்நகை அடகு முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு இறுதியாக மேலும் மேலும் கடன் பொறியில் சிக்குண்டுள்ளனர்.

இம்மக்களின் துயர நிலையைப் புரிந்து கொண்ட அரசாங்கம், உயர்வான வட்டி வீதத்தின் கீழ் தமது நகைகளை ஈடு வைத்துள்ள மக்களின் நகைகளை 2015 மார்ச் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து 2015 ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு இடையிலான விசேட காலப்பிரிவிற்குள் அவற்றை மீட்கும் போது அறவிடப்படும் உயர்வான வட்டி வீதத்தை விசேட நிவாரணமாக பதிவழிப்பதற்கு முன் மொழிந்துள்ளத.

அதன் பிரகாரம், தமது நகைகளை அரச வங்கிகளில் ஈடு வைத்து அதிக பட்சம் ரூபா 200,000 வரை ஈட்டுக்கடனைப் பெற்றுக் கொண்டுள்ள மக்கள் இந்நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடையவர்களாக இருந்தனர். இப்பிரேரணைத் திட்டத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளதோடு, இதன் கீழ், 36,011 பயனாளிகளின் அதிக அளவிலான வட்டியைப் பதிவழிப்பதற்காக 7 அரச பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு ரூபா 94.07 மில்லியன்கள் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை2.15 > அரச பங்கேற்பு வங்கிளுக்கான வட்டி மானியக் கொடுப்பனவுகள் - 2015**

| மாதம் | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| மார்ச் | 5,621 | 11,553,130.45 |
| ஏப்ரில் | 9,367 | 21,375,805.49 |
| மே | 12,971 | 33,302,688.74 |
| ஜூன் | 8,052 | 27,833,272.88 |
| **மொத்தம்** | **36,011** | **94,064,897.56** |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்*

# 3 நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

## 3.1 நிறுவாகப்பிரிவு

### 3.1. பணியாளர் தொகுதி

| | பதவிகள் | அனுமதிக்கப்பட்ட பதவிகள் | தற்போது இருக்கும் பதவிகள் |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 02 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 00 |
| 03 | பணிப்பாளர் | 04 | 04 |
| 03 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் | 06 | 05 |
| 04 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் - கணக்காளர் | 01 | 01 |
| 05 | திட்டமிடல் உதவியாளர் | 01 | 01 |
| 06 | ஆராய்ச்சி உதவியாளர் | 02 | 02 |
| 07 | தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பஉதவியாளர்உதவியாளர் | 01 | 01 |
| 08 | முகாமைத்துவ உதவியாளர் | 07 | 05 |
| 09 | காரியாலய தொழில் உதவியாளர் | 06 | 06 |
| 10 | சாரதி | 04 | 04 |
| *மொத்தம்* | | *31* | *27* |

**புதிதாக2015ல்திணைக்களத்தில்இணைந்தோர்**

1. செல்வி.என்.ஏ.கே.சமரநாயக்க–உதவிப்பணிப்பாளர்
2. திருமதிபீ.ஏ.கே.எஸ்.பீ.ஜயவீர--முகாமைத்துவஉதவியாளர்
3. செல்வி.பவனிசந்துனிக்கா--முகாமைத்துவஉதவியாளர்
4. திரு.எஸ்.ஏ.கீர்த்திசேன—சாரதி
5. திரு.விக்ரமசிங்க -- சாரதி
6. திரு.டீ.ஈ.கே.பெலவத்தகே---அலுவலகஉதவியாளர்

**2015ல்திணைக்களத்தில்இருந்துமாற்றலாகிச்சென்றோர்**

1. திருமதிபீ.எஸ்எஸ்சமரவிக்கிரம--முகாமைத்துவஉதவியாளர்
2. – திரு. கே. பீ.ஜ.சமிந்த- அலுவலகஉதவியாளர்
3. திரு. கே.ஜீ.ஏ.குமாரசிரி - -- சாரதி

### 3.1.2 பணியாளர்களின் தகவல்கள்

### 3.2 **2015-12-31** வரையிலானபணியாளர்தகவல்கள்

| பெயர் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொலைபேசி | தொலை நகல் | மின் அஞ்சல் |
| திரு. ஏ. எம். பீ. எம். பீ. அத்தபத்து | பணிப்பாளர் நாயகம் | 2484542 | 2394908 | dgdf@dfd.treasury.gov.lk atapattu@dfd.treasury.gov.lk |
| திரு. ஓ. எம். ஜாபீர் | பணிப்பாளர் | 2484507 | 2484955 | mjabeer@dfd.treasury.gov.lk |
| திருமதி. எம். கே. டீ.என். மாதம்பே பணிப்பாளர் | பணிப்பாளர் | 2484605 | 2484955 | nilukad@dfd.treasury.gov.lk |
| திரு. பீ. எம். கே. ஹெட்டியாரச்சி | பணிப்பாளர் | 2484572 | 2484955 | manjulap@dfd.treasury.gov.lk |
| | பணிப்பாளர் | 2484507 | 2484955 | |
| திரு. எச். எச். வீ. | பணிப்பாளர் | 2484595 | 2484955 | hemanthak@dfd.treasury.gov.lk |
| திருமதி. டப்ளியூ.எல்.எம்.ஏ. லியனஹே | கணக்காளர் | 2484596 | 2484955 | liyanagem@dfd.treasury.gov.lk manorigl@yahoo.com |
| செல்வி. ஆர்ஏ.டீ.ஆர். ரணசிங்க | உதவிப் பணிப்பாளர் | 2484596 | 2484955 | ranithad@dfd.treasury.gov.lk radranitha@gmail.com |
| செல்வி. ஜே.டீ.கொடின்கடுவை | உதவிப் பணிப்பாளர் | 2484854 | 2484955 | dilrukshij@dfd.treasury.gov.lk jdilkotinkaduwa@yahoo.com |
| செல்வி. திலுமி டப்ளியூ. குமாரகுரு | உதவிப் பணிப்பாளர் | 2484501 | 2484955 | dilumiw@dfd.treasury.gov.lk |
| திரு. எச். பீ. எஸ். சாந்த | திட்டமிடல் உதவியாளர் | 2484884 | 2484955 | shantha@dfd.treasury.gov.lk |
| செல்வி ஏ. எம். விக்ரமசிங்க | ஆராய்ச்சி உதவியாளர் | 2484884 | 2484955 | amanthiw@dfd.treasury.gov.lk amanthi1974@ yahoo.com |
| திருமதி. பீ.எச்.எஸ். சமரவிக்ரம | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |
| திருமதி. திலந்தி ஹேவாவசம் | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |

| பெயர் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொலைபேசி | தொலை நகல் | தொலை அஞ்சல் |
| திருமதி. எச். ஏ. டீ. ஏ. நிலந்தி | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |
| திரு. ஆர்.கே. லெனோரா | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |
| திரு. எச். எச். எச். எம். டப்ளியூ. கே. செனெவிரத்ன | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |
| செல்வி ஜே. எம். ஐ. ஏ. கீஷானி | தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளா | 2484884 | 2484955 | - |
| திரு. எம். என். எல். பிரேமதிலக | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. எச். பீ. ஆர். சமரசிங்க | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. கே. ஜீ. ஏ. குமாரசிரி | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. கே. டீ. கீர்த்திரத்ன | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. எஸ். ஏ. கீர்த்திசேன | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. ஆர். பீ. ஜெ. ஹன்டன் | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. கே. டீ. டீ. குணசேகர | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. குணவர்தன | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. பீ. எச். சு. எச். த சிள்வா | சாரதி | 2484855 | 2484955 | - |
| திருமதி ஜே. ஏ. எச். சீ. கே. ஜயசிங்க | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. ஆர். ஏம். குலதுங்க | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. கே. பீ. ஐ. சமிந்த | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. ஜே. எம். டீ. ஜே. எச். ஹேமந்த | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| ஜயசிங்க | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |

### 3.1..3 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்

### 3..33 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நடாத்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| திருமதி.எம்.கே.டீ.என்.மாதம்பே- பணிப்பாளர் | ஈ-அரசுபற்றியபயிற்சிப்பட்டறை | 2015-11-23 | மிலோதாநிறுவனம் |
| என். ஏ. கே. சமரநாயக்க உதவிப்பணிப்பாளர் | ஈ-அரசுபற்றியபயிற்சிப்பட்டறை | 2015-11-23 | மிலோதாநிறுவனம் |
| திளுமிகுமாரகுரு உதவிப்பணிப்பாளர் | ஈ-அரசுபற்றியபயிற்சிப்பட்டறை | 2015-11-23 | மிலோதாநிறுவனம் |
| எச். பீ. எஸ். சாந்த திட்டமிடல்உதவியாளர் | ஈ-அரசுபற்றியபயிற்சிப்பட்டறை | 2015-11-23 | மிலோதாநிறுவனம் |
| டீ.ஹேவாவசம்.முகாமைத்துவஉதவியாளர் | கணணிபற்றியபயிற்சி | 2015-09-28 | இலங்கைஅபிவிருத்திநிருவாகநிறுவனம் |
| எச். பீ. எஸ். சாந்த திட்டமிடல்உதவியாளர் | கணணிபற்றியபயிற்சி | 2015-08-10-2015-08-11 | மிலோதாநிறுவனம் |
| ஆர்.கே.லெனோராமுகாமைத்துவஉதவியாளர் | கணணிபற்றியபயிற்சி | 2015-08-10-2015-08-12 | மிலோதாநிறுவனம் |
| எஸ்.எஸ்.எச்.எம்.டப்.கே. செனவிரத்னமுகாமைத்துவஉதவியாளர் | கணணிபற்றியபயிற்சி | 2015-08-10-2015-08-13 | மிலோதாநிறுவனம் |
| பீ.எச்.சீ.எஸ்.தசில்வாஜசாரதி | திறன்அபிவிருத்திப்பயிற்சிப்பட்டறை | 2015-06-26-2015-06-27 | நிபுனதாபியச |

### 3.1.4 வெளி நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்

### 3.4 வெளி நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நாட்டின் பெயர் |
|---|---|---|---|
| திரு. ஏ. எம். பீ. எம். பீ. அதபத்து பணிப்பாளர் நாயகம் | அபிவிருத்திநிதிபற்றியமூன்றாம்சர்வதேசமாநாடுதிட்டமிடல் | 2015-04-13-<br>2015-04-17 | ஐக்கியஅமெரிக்கா |
| | அபிவிருத்திநிதிபற்றியமூன்றாம்சர்வதேசமாநாடுதிட்டமிடல் | 2015-06-15-<br>2015-06-19 | ஐக்கியஅமெரிக்கா |
| | அபிவிருத்திநிதிபற்றியமூன்றாம்சர்வதேசமாநாடு | 2015-07-13<br>2015-07-16 | எத்தியோப்பியா |
| | அரசைக்கட்டியெழுப்புவதற்கான தலைமைத்துவப்பயிற்சி | 2015-09-20-<br>2015-09-25 | அவுஸ்திரேலியா |
| திரு. ஓ. எம்.ஜாபீர் பணிப்பாளர் | அந்நியமுதலீட்டுஈர்ப்புபற்றியபயிற்சி | 2015-05-10<br>2015-05-17 | சிங்கப்பூர் |
| | சமூகக்காப்புறுதிபயிற்சி | 2015-08-21<br>2015-09-03 | சீனா |
| திரு. எச். எச். வீ. குமார பணிப்பாளர் | பொருளாதரஅபிவிருத்திவழிமுறைகள் | 2015-09-09<br>2015-09-24 | கொரியா |
| திருமதி.எம்.கே.டீ.என்.மாதம்பே- பணிப்பாளர் | 71ம்ஜ.நா.ஆசியபசுபிக்கல்வி,சமூக,மாநாடு | 2015-05-24<br>2015-05-30 | தாய்லாந்து |
| | வலயபொருளாதார,நிதிபயிற்சிப்பட்டறை | 2015-10-04<br>2015-10-10 | கொரியா |
| பீ.எம்.கே.ஹெட்டியாரச்சி- பணிப்பாளர். | சிறியமற்றும்நடுத்தரஆசியமாநாடு | 2015-05-25<br>2015-05-29 | மலேசியா |
| செல்வி. ஆர். ஏ. டீ. ஆர். ரணசிங்க உதவிப் பணிப்பாளர் | அபிவிருத்திபற்றியமாநாடு | 2015-10-11<br>2015-11-02 | கொரியா |
| செல்வி. ஜே. டீ. கொடின்கடுவை உதவிப் பணிப்பாளர் | இலங்கையின்கிராமியஅபிவிருத்திஅடைந்துவரும்நாடுகள்பற்றியசீனக்கொள்கை | 2015-05-18<br>2015-06-11 | சீனா |
| செல்வி. திலுமி டப்ளியூ. குமாரகுரு உதவிப் பணிப்பாளர் | அபிவிருத்திஅடைந்துவரும்நாடுகளில்சிறியமற்றும்நடுத்தரக் கைத்தொழில்களின்அபிவிருத்தி | 2015-10-14<br>2015-11-05 | சீனா |
| திரு. எச். பீ. எஸ். சாந்த திட்டமிடல் உதவியாளர் | அபிவிருத்திஅடைந்துவரும்நாடுகளில்ஏற்றுமதிபொருளாதார வளர்ச்சி | 2015-10-15<br>2015-11-07 | சீனா |

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நாட்டின் பெயர் |
|---|---|---|---|
| ஏ.எம்.விக்ரமசிங்க-ஆய்வுஉதவியாளர் | அபிவிருத்திஅடைந்துவரும்நாடுகளில்சுதந்திரவர்த்தகஉக்தி | 2015-06-29<br>2015-07-23 | சீனா |
| செல்வி ஜே. எம். ஐ. ஏ. கீஷானி தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | தொடர்பாடல்தொழிநுட்பம்பற்றியபட்டமேற்படிப்பு | 2015-2016 | கொரியா |


.

## 3.2 நிதி தொடர்பான தகவல்கள்

திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டுமீண்டுவரும்செலவினமாக 3,608,656,160 ரூபாவும் மூலதனச் செலவினமாகரூபா 3,430,790,000 வும் ஒதுக்கப்பட்டதுடன் மொத்தம் 7,039,446,160 ரூபா2015ம்ஆண்டுவரவு செலவுத்திட்டத்தினூடாக செலவுத்தலைப்பு 243 ன் கீழ்கருத்திட்டம் 1மற்றும்கருத்திட்டம்2ன்கீழ்ஒதுக்கப்பட்டது.குறிப்பிட்ட ஆண்டின் மொத்த உண்மைச்செலவு 6,840,253,313 ரூபாவாகக் காணப்பட்டதோடு உண்மைமீண்டுவரும் செலவினங்களும்மூலதன் செலவினங்களும்முறையே 3,586,083,725 ரூபாவும் 3,254,169,587 ரூாவுமாகும்.குறிப்பிட்ட ஆண்டில்செய்யப்பட்ட செலவு விபரங்கள்கீழேதரப்பட்டுள்ளன

## 3.5 வரவு -செலவுத்திட்டநிதிமுடக்கம்

| செலவு விபரம் | மதிப்பீடு | உள்ள படி |
|---|---|---|
| **<u>மீண்டுவரும் செலவினம்</u>** | **3.608.656.160.00** | **3.586.083.725.00** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 17,985,000.00 | 17,694,995.00 |
| பிரயாணச் செலவுகள் | 1,578,000.00 | 1,514,383.00 |
| வழங்கல்கள் | 1,726,040.00 | 1,655,140.00 |
| பராமரிப்புச் செலவினம் | 1,405,000.00 | 1,365,462.00 |
| சேவைகள் | 2,201,500.00 | 2,124,127.00 |
| மானியக் கொடுப்பனவுகள் | 3,577,410,160.00 | 3.555,392,605.00 |
| ஏனைய மீண்டு வரும் செலவினம்- மாற்றல்கள் | 6,350,460.00 | 6,337,013.00 |
| **<u>மூலதனச் செலவினம்</u>** | **3,430,790,000.00** | **3,254,169,587.00** |
| மூலதனச் சொத்துக்களைப் பற்றுதல் | 415,000.00 | 406,888.00 |
| கொள் திறன் அபிவிருத்தி | 1,450,000.00 | 1,449,075.00 |
| ஏனைய மூலதனச் செலவினம் | 267,000,000.00 | 241,299,529.00 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை மேமபடுத்துவதற்கான வசதியளிப்புக் கருத்திட்டம் (இ.அரசு / உ.வ) | 2,410,.000,000.00 | 2,341,356,882.00 |
| சிறிய நடுத்தர தொழில் துறையினை மேம்படுத்ததல் (இ.அரசு / ஜீடிஇஸட்) | 274,925,000.00 | 248,0371,401.00 |
| உலக உனவு நெருக்கடி பொறுப்பு நிகழ்ச்சித் திட்டம் (இ.அரசு / உ.வ) | 477,000,000.00 | 421,.619,.811.00 |
| **மொத்தம்** | **7,039,446,160.00** | **6,840,253,313.00** |




அட்டவணை 3.6 >அரசஅலுவலர்களுக்கானமுற்பணக்கணக்குபீ- 2015

| # | விபரம் | அனுமதிஎல்லை | உண்மைத்தொகை |
|---|---|---|---|
| 1 | உச்சசெலவுஎல்லை | 9,000,000 | 4,313,184 |
| 2 | உச்சவரவு எல்லை | 655,000 | 1,150,948 |
| 3 | ஆகக்கூடியகடன்எல்லை | 2,655,000 | 1,779,338 |

*Sources : Department of Development Finance*

## 3.3 கணக்காய்வுஐயவினா

கணக்காய்வுத்திணைக்களமும் முகாமைத்து வகணக்காய்வுத்திணைக்களமும் முன்வைத்தஅனைத்துகணக்காய்வு ஐயவினாக்களுக்கும் விடையளித்ததோடு அவர்களால்சுட்டிக்காட்டப்பட்ட குறைகளைநிவர்த்தி செய்வதற்கும்நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டன.

### 3 .3 கணக்காய்வுஐயவினா- முகாமைத்துவகணக்காய்வுத்திணைக்களம்-

| | பெற்றதி கதி | விடயம் | பதில்அனுப்பிய திகதி |
|---|---|---|---|
| 1 | 2015.05.07 | முதல்காலாண்டுக்கானமுகாமைத்துவக்கணக்காய்வுஅறிக்கை | 2015.05.12 |
| 2 | 2015.08.04 | இரண்டாம்காலாண்டுக்கானமுகாமைத்துவக்கணக்காய்வுஅறிக்கை | 2015.08.23 |
| 3 | 2015.1007 | மூன்றாம்காலாண்டுக்கானமுகாமைத்துவக்கணக்காய்வுஅறிக்கை | 2015.10.13 |
| 4 | 201510.30 | மூன்றாம்காலாண்டுக்கானமுகாமைத்துவக்கணக்காய்வுஅறிக்கை | 2015.11.13 |
| 5 | 2016-0314 | நான்காம்காலாண்டுக்கானமுகாமைத்துவக்கணக்காய்வுஅறிக்கை | 2016.03.28 |

**அட்டவணை 3.8 >கணக்காய்வுஐயவினா-கணக்காய்வுத்திணைக்களம்-2015**

| | பெற்றதிகதி | விடயம் | பதில்அனுப்பியதிகதி |
|---|---|---|---|
| 1 | 2015-04-28 | ஒதுக்கீட்டுக்கணக்கு-2015 | 2015-5-5 |
| 2 | 2015-07-20 | வாகனப்பராமரிப்பு-2015 | 2015-08-09 |
| 3 | 2015-07-29 | செயலாற்றுகை-2015 | 2015-08-11 |
| 4 | 2015-09-01 | அபிவிருத்திநிதித்திணைக்களத்தின்முகாமைத்துவக்கணக்காய்வுஅறிக்கை-2015 | 2015-09-14 |
| 5 | 2015-09-01 | 2014 கணக்காய்வாளர்அறிக்கை | 2015-09-09 |
| 6 | 2016.02.17 | களஞ்சியசாலைப்பற்றுச்சீட்டுநிதியீட்டத்திட்டம் | 2016-03-01 |